விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 10 திங்கட்கிழமை (22.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 65

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழ்க் காங்கிரஸ் வெளியேறியது!

### அதன் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழ்க் கூட்டமைப்பின் ஏனைய மூன்று கட்சிகளுடன் இனிவரும் காலங்களில் இணைந்து செயற்படாது எனக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் காங்கிரஸ் இணைந்து செயற்படாது. நாம் இவ்வாறான ஒரு முடிபினை எடுத்தமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அடிப்படைக் கொள்கையிலிருந்து விலகி செயற்பட்டதன் காரணமாகவே அக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமிழ்க் கூட்டமைப்பு 2001 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ரி.எம்.வி.பி. கட்சி வடக்கிலும் போட்டி


(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கிலும் போட்டியிடவுள்ளது.

இத் தகவலைக் கட்சியின் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார். வடபதி மக்களின் வேண்டுகோளின் பேரில் தமது கட்சி வன்னி மாவட்டத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் தமது வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாக அவர் (16 ஆம் பக்கம் பார்க்க)

# நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கூட்டமைப்புக்கு 20 ஆசனங்கள் உறுதி

### சுரேஸ் பிரேமச்சந்திரன் நம்பிக்கை



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள சில உறுப்பினர்களைத் தவிர ஏனையவர்கள் போட்டியிடுகின்றனர். இப் பொதுத் தேர்தலில் தமக்கு 18 தொடக்கம் 20 வரையான ஆசனங்கள் கிடைக்கும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் வேட்பாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

### பொதுத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து

## ரணில்-மனோ கணேசன் இருவரும் உடன்படிக்கையில் நேற்று கைச்சாத்து

(கொழும்பு)

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் தேர்தல் உடன்பாடு தொடர்பான உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதற்கான இணக்கம் நேற்று முன்தினம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்குக் கொழும்பு மாவட்டத்தில் மூன்று வேட்பாளர்களும், நுவரெலியா, மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களில் தலா இரண்டு வேட்பாளர்களும்,

கம்பஹா, கண்டி, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய விசாவுக்கு புதிய கட்டுப்பாடுகள்

(கொழும்பு)

இந்திய உள்துறை அமைச்சு புதிய விசா நடைமுறைகளை கொண்டுவந்துள்ளது. அதிக கட்டுப்பாடுகள் உள்ள இந்த புதிய முறையானது இலங்கைப் பயணிகளையும் வெகுவாகப்பாதிக்கும் என்று நம்பப்படுகிறது.

ஒருவகையான பயிற்சி பட்டறைகளோ, மகாநாடுகளோ இந்தியாவின் பாதுகாப்பு அனுமதி இன்றி நடத்தப்பட முடியாது என்று இந்திய உள்ளக அமைச்சின் அறிக்கை கூறுகின்றது.

ஏற்பாட்டாளர்கள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவுக்கு எதிராக மே 14 க்கு முன்னர் விசாரணை!

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணைகள் எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படவுள்ளது.

இராணுவத்திலிருந்து இளைப்பாறிய ஒருவர் அடுத்து வரும் 6 மாதங்களுக்கு இரா ணுவச் சட்டத்திற்கு உட்படுத்தப்படுவார் என்ற அடிப்படையில் இந்த வரையறை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் காலப் பகுதிக்குள் அவர் இராணுவ நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படாவிட்டால் சிவில் நீதிமன்றத்திலேயே அவருக்கு எதிரான விசாரணைகளை நடத்த முடியும் என சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக இன்னமும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## மனோ கணேசன் கண்டியில் போட்டி?

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மனோ கணேசனின் சகோதரரான பிரபா கணேசன் கொழும்பு மாவட்டத்தின் சார்பில் போட்டியிடவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தின் கீழ் (16 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பு உடைந்தது? மாற்று அணி அமைக்க கடும் முயற்சி!

### கொழும்பு ஊடகம் ஒன்றில் தகவல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கடந்த தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெற்றி பெற்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் வெளியேறியுள்ளனர்.

இதன்மூலம் கடந்த சில நாள்களாகக் கூட்டமைப்புக்குள் நிலவி வந்த முரண்பாடுகள் மற்றொரு கட்டத்திற்கு வந்துள்ளது என கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்ட செய்தி ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளிலிருந்து விலகிச் செல்கின்றது. இவ் அபிலாஷைகளில் உறுதியாக நின்றவர்களைப் புறக்கணிக்கின்றது என குற்றஞ்சாட்டியே இவர்கள் வெளியேறியுள்ளனர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த விடயங்கள் தொடர்பாக கடும் விவாதங்களைக் கூட்டமைப்புக்குள் நடத்தியிருக்கும் போது அவற்றை ஏற்கக் கூடிய நிலை கூட்டமைப்புக்குள் இருக்கவில்லை.

இனப்பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டம் தொடர்பாக தேர்தலின் பின்னர் முடிபெடுக்கலாம் என்று அவருக்குக் கூறப்பட்டது. கூட்டமைப்பின் முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரன் (16 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## போட்டி அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினால் நடத்தப்படும் யாழ்.மாவட்ட பாடசாலைகளில் 17 வயதுப் பிரிவு உதைபந்தாட்டப் போட்டி அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும்.

இப் போட்டியில் கலந்து கொள்ளும் பாடசாலைகள் தமது பொறுப்பாசிரியர்களை தவறாது அனுப்பிவைக்குமாறு போட்டி இணைப்பாளர், பேட்டி பனிஸ்ரர் கேட்டுள்ளார். (சு)

## யாழ்.மாநகர சபையின் 5ஆவது கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் 5ஆவது மாதாந்த கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10மணிக்கு அலுவலக மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு மாநகர முதல்வர் உட்பட மாநகர உறுப்பினர்கள், ஆணையாளர் உட்பட மாநகரசபை திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரை சமுகமளிக்குமாறு மாநகர சபை செயலாளர் இ.இராசதுரை கேட்டுள்ளார். (சு)

## ஊடகவியலாளர் பிரகீத் குறித்த எந்தத் தகவலும் இல்லை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட தொடர்பில் இது வரை எவ்வித தகவல்களும் இல்லையென அவரது மனைவி கூறியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின் போது எதிரணியின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக செய்தி இணையதளமொன்றில் கருத்துக்களை எழுதி வந்த நிலையில் பிரகீத் காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் அவர் காணாமல்போய் ஒருமாதம் கடந்துள்ள போதிலும் பொலிஸாரின் விசாரணையில் எவ்வித முன்னேற்றமும் இல்லையெனவும் அதிகாரிகளிடம் அவரை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாகவும் ஊடகவியலாளர் பிரகீத்தின் மனைவி சந்த்யா எக்னலிகொட குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் அவரைக்கண்டுபிடிக்கும் பணியில் நீதிமன்றம் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் சில தினங்களுக்கு முன்னர் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

ஊடகவியலாளரை கண்டுபிடிக்கும் விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக இலங்கைப்பொலிஸ்பேச்சாளர் பி.பி.சியிடம் கூறினார். (சு-5,9)

## பேசும் படம்



மறு வாழ்வை நம்பி.....?

## சுனாமியினால் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு உதவிப் பொருள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெற்றோரில் ஒருவரை இழந்த சிறுவர்களுக்கு, இலங்கை வங்கியினால் உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 11மணிக்கு இலங்கை வங்கியின், சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரெட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.


கௌரவவிருந்தினராக இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் ஆ.ஜெயேந்திரா கலந்து கொள்கிறார்.

இலங்கை வங்கியானது சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெற்றோரில் ஒருவரை இழந்த சிறார்களின் எதிர்கால வாழ்வை மேம்படுத்தும் முகமாக,

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயற்திட்டம், தேசியசிறுவர்பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து பணம் மற்றும் வேறு உதவிகளையும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சு)

## தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வேலைத்திட்டம் எதுவும் இடம்பெறவில்லை

### சித்தார்த்தன் அறிக்கை



(கொழும்பு)

அனைத்து கட்சிகளும் தமிழ் மக்களின் ஒற்றுமை பற்றி கூறி வருகின்றபோதிலும் இவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளின் தீர்வுக்கான ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அவர்களின் முயற்சிகள் நடைபெறவில்லை என புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

தேர்தல் சம்பந்தமாக தமிழ்க் கட்சிகளிடையே ஒரு ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்ற ரீதியில் நாங்கள் பல தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம்.

இருந்தாலும் இந்த கூட்டுச் சம்பந்தமான பேச்சுக்களை அடிப்படையிலேயே தேர்தலை நோக்கியதாகவே அனைத்து கட்சிகளும் பார்க்கின்றன.

தத்தமது கட்சிக்கு கூடுதலான வேட்பாளர் பங்கீடு மற்றும் தத்தமது கட்சியின் வெற்றியை உறுதி செய்யக்கூடிய வகையிலான கூட்டுக்கள் அமைவதிலுமே அனைத்துக் கட்சிகளும் முனைப்புக் காட்டி வருகின்றன.

அனைத்து கட்சிகளும் தமிழ் மக்களின் ஒற்றுமை பற்றி கூறி வருகின்றபோதிலும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளின் தீர்வுக்கான ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இந்த கூட்டமைப்பு முயற்சிகள் நடைபெறவில்லை.

இருந்தாலும் தமிழ் கட்சிகள் கூடியளவுக்கு ஒன்றுபட்டு தேர்தலுக்கு முகம்கொடுப்பதையே நாங்களும் முழுமையாக விரும்புகிறோம். இதனடிப்படையில் நாங்கள் பேச்சு வார்த்தைகளை நடத்துகின்றோம்.

ஆனால் எப்படியிருந்தபோதிலும் அனைத்துக் கட்சிகளும்ஒன்றாக தேர்தலுக்கு முகம்கொடுக்கக் கூடிய வாய்ப்பு குறைவாகவே காணப்படுகின்றது. ஆகவே தமிழ்த் தரப்பு இரண்டு அல்லது மூன்று பிரிவுகளாக நின்று தேர்தலை முகங்கொடுப்பதற்கான சாத்தியக் கூறுகளே தென்படுகின்றன.

இப்படி நடந்தாலும் தேர்தலுக்குப் பிறகாவது இந்தக் கட்சிகளிடையே தமிழ் மக்களுடைய தீர்வு சம்பந்தமாகவும், அடிப்படைப் பிரச்சினை சம்பந்தமானதும் ஆன தீர்வுகளுக்கு ஒரு புரிந்துணர்வு உருவாக்கப்பட வேண்டும்.

தேர்தலுக்குப் பிறகாவது இந்தக் கட்சிகள் மத்தியிலே ஒரு தீர்க்கமான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று தமிழ் மக்களுடைய பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒற்றுமையாக செயற்படக்கூடிய ஒரு நிலைமை உருவாக்கப்பட வேண்டும்.

இந்தத் தேர்தலிலே நாங்கள் எங்களால் இயன்றளவுவிட்டுக்கொடுப்புகளை கொடுத்து மற்றும் ஒத்துக் கொள்ளக்கூடிய கட்சிகளுடன் கூட்டமைப்பொன்றை அமைப்பதற்குமுயற்சித்து வருகின்றோம். சாத்தியமான கட்சிகளுடன் சேர்ந்து தேர்தலுககு முகங்கொடுப்போம் என்றுள்ளது. (சு-5)


எமது நிறுவனத்தில் பயின்று இன்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் **Diploma in Information Technology** சான்றிதழை பெறும் மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

BIT

--Year 1,2,3 மாணவர்களும் விரிவுரையாளர்களும்

2008/09 கொழும்பு பல்கலைக்கழக DIT பெறும் எமது நிறுவன மாணவர்கள்



P.Asoktha, G.Kalaiarasi, V.Arani, S.Garthiga, K.Janane, P.Senthuja, N.MaryUthista, S.Logini, P.Kobikrishan, N.Aingaresan, S.Kirushanthan, M.Kokulan, J.Satheechan, R.Thiruchentooran, S.Mayurathan, S.Mathusoothanan, S.Thiriveny Thirilosiny

BIT?
- கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மிக உயர் தேர்ச்சி உடைய வெளிவாரிக்கற்கை நெறி.
- A/L 2009 தோற்றியோரும் விண்ணப்பிக்க முடியும்.(BIO,Maths,Arts,Commerce).
- A/L சித்தியடையத்தவறின் FIT எனும் கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலம் கற்கைநெறியைத் தொடரமுடியும்.
- 1ம் ஆண்டின் முடிவில் DIT ம், 2ம் ஆண்டின் முடிவில் HDITம் கொழும்பு பல்கலைக் கழகத்தால்வழங்கப்படும்.
- கற்கை நெறியை எந்தவொரு பல்கலைக்கழக மாணவனும் வெளிவாரியாக பயில முடியும்.
- முழுமையாக பூர்த்தி செய்தோர் மேற்படிப்பை தொடர்வதற்கான Student Visa and Work Permit பெற முடியும்.
- பகுதி பகுதியாக செலுத்தக்கூடிய கற்கை நெறிக்கட்டணம் 3 ஆண்டுகளுக்கும் 75,000 ரூபா மட்டுமே.

MCS?
- ஜனா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.
- BIT கற்கையை பட்டதாரிகளாலும் கணனி பொறியியலாளர்களாலும் கடந்த 6 ஆண்டுகளாக வடமாகாணத்தில் தொடர்ச்சியாக நடாத்திவரும் நிறுவனம். ஆதாரம் கொழும்பு பல்கலைக்கழக BIT கைநூல்.
- BIT கற்கை நெறியின் சிறப்பான (எமது யாழ் மாணவர்களின்) செயற்பாடடிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக் கொண்ட நிறுவனம்.
- ICDL, MICROSOFT, CISCO, IBM, SUNMICROSYSTEM ,CIW, DELL, COMTIA மற்றும் CIMA நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிமையமாகவும், பரீட்சை நிலையமாகவும் தொழிற்படும் நிறுவனம்

மாணவர்களை பல்திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் BIT மாணவர்களுக்கு

BIT @ MCS?
- ICDL (International Computer Driving License)
- SCJP (Sun Certified Java Programmer)
- MCSE (Microsoft Certified Systems Engineer)
- BCS (British Computer Society)
- CCNA (Cisco Certified Network Associate)

100% *OFF

Call 772395895

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பரமேஸ்வராச்சந்தி அருகே Bus Route 764

பதிவுகள் 27.02.2010 க்கு முன்னர்

(C-4485)






### அம்பிகை திருமண பொருத்துநர்

உள்நாடு, வெளிநாடு உட்பட டாக்டர், என்ஜினியர், ஆசிரியர், சிறுதொழில் பார்ப்போர், வியாபாரிகள் உட்பட பொருத்தமான மணமகன், மணமகள் எம்மிடம் உண்டு.

அத்துடன் ஆண், பெண் இருவர் சாதகமும் பொருத்தம் பார்த்தும் எழுதிக் கொடுக்கப்படும். சாதக கொப்பி எழுதிக் கொடுக்கப்படும்.

T.P:- 021 7902151
077 4103597

அம்பிகை திருமண பொருத்துநர்,
கீரிமலை வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

உரிமையாளர்:-உதயகுமார் லலிதாம்பிகை.

(C-4465)

# இன்று ஒரு தகவல்

## கல்லறை நோக்கி...

ஒருவருடைய உண்மையான குணம் அவர் இந்த உலகத்தை விட்டுப் போற சமயத்தில்தான் தெரியுமாம். இதை விளக்க பெரியவர் ஒருத்தர் ஒரு கதை சொல்லியிருக்கிறார்.

ஒரு பெரிய மனிதர் இருந்தார். அவர் மிகவும் வசதியானவர். இருந்தாலும் அந்த வசதியை அனுபவிக்கத் தெரியாதவர்.

அவர் கடைசித் தறுவாயில் மரணத்தை எதிர்நோக்கி காத்திருந்தார். படுக்கையைச் சுற்றிச் சொந்த பந்தமெல்லாம் உட்கார்ந்திருந்தனர்.

பிள்ளைகளெல்லாம் அப்பா இறந்த பின் அவரை எப்படிக் கல்லறைக்குக் கொண்டு போவது என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மூத்த பிள்ளை சொன்னான் "அப்பா இறந்த பின் அவரைக் கல்லறைக்குக் கொண்டு போகவேண்டும். அதற்கு வாடகைக்கார் ஒன்றை ஏற்பாடு செய்யலாம்" என்றான்.

அடுத்த பிள்ளை சொன்னான். "அவர் எப்பொழுதும் ஒரு விலையுயர்ந்த காரில் போக வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் வாழ்க்கையில் ஒருநாள் கூட அவர் அதில் உட்கார முடியவில்லை. கடைசியில் கல்லறைக்குப் போற சமயத்திலாவது அவர் அதில் போய்ப் பார்க்கட்டும் என்றான்.

இதைக் கேட்டதும் பெரியவன்...

"விபரம் தெரியாமல் பேசாதே... நீ சின்னவன். உனக்கு ஒரு விடயமும் புரியாது. இறந்தவர்கள் எதையும் அனுபவிக்க முடியாது. அவர்களுக்கு எந்தக் காரா இருந்தால் என்ன? அது உயர்ந்ததா மட்டமானதா என்று அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது? அதனால் விலையுயர்ந்த கார் வேண்டாம். சாதாரண காரே போதும்" என்றான்.

இதைக் கேட்டதும் இன்னொரு பிள்ளை சொன்னான். "நீங்கள் இரண்டு பேரும் பேசுவதில் கொஞ்சம்கூட அர்த்தமில்லை. கல்லறைக்கு உடம்பை மட்டும் எடுத்துக் கொண்டு போக கார் எதற்கு? அதை ஏதாவது ஒருவழியில் கல்லறைக்கு எடுத்துக் கொண்டு போக வேண்டும். அவ்வளவுதானே!

எனக்கு வேண்டியவன் ஒருத்தன் இருக்கிறான். அவனிடம் சவவண்டி ஒன்று இருக்கிறது. அவனைக் கூட்டிக் கொண்டு வருகிறேன். அது இன்னும் வசதியாக இருக்கும்" என்றான்.

இதைக் கேட்டதும் இன்னொரு மகன் சொன்னான் "காரும் வண்டியும் எதற்கு? அவர் என்ன கல்யாணமா பண்ணப் போகிறார். இறந்தவுடன் அவரை தூக்கிக் கொண்டு போய் நம்வீட்டுக்கு வெளியே உள்ள குப்பைத் தொட்டியில் போட்டுவிடலாம்.

மாநகர சபை வண்டி அவரை தானாகவே தூக்கிக் கொண்டு போய்விடும். நமக்குச் செலவே இல்லை" என்றான்.

இந்த நேரத்தில் சாகக்கிடந்த அந்தப் பெரிய மனுஷன் மெதுவாக கண்ணைத் திறந்து...

"எங்கே என் செருப்பு?" என்றார்.

பிள்ளைகளெல்லாம் "எதற்கப்பா இப்பொழுது செருப்பு?" என்று கேட்டார்கள்.

"என் செருப்பு இப்பொழுது எனக்கு வேண்டும்" என்றார் அவர்.

"அப்பா எப்பவுமே பிடிவாதக்காரர். அவர் தன்னுடைய செருப்போடு போக ஆசைப்படுகிறார் போலிருக்கு. எடுத்துக் கொடுங்க.... அவருடைய செருப்பை அவரே வைத்திருக்கட்டும்" என்றான் மூத்த பையன்.

செருப்பை எடுத்துக் கொடுத்தார்கள்.

அவர் அதை வாங்கிக் காலில் மாட்டிக் கொண்டு தட்டுத் தடுமாறி எழுந்து நின்றார்.

அதன் பின் பிள்ளைகளைப் பார்த்து "பிள்ளைகளே... நான் இன்னும் கொஞ்ச நேரம் உயிரோடு இருப்பேன். அதற்குள் கல்லறைக்கு கால்நடையாக நடந்தே போய் விடுகிறேன். உங்களை அங்கே சந்திக்கிறேன். நீங்கள் ஊதாரித்தனமாக செலவு செய்யத் திட்டம் போடுகிறீர்கள்.

நான் காரில் போக வேண்டுமென்று கனவுதான் கண்டேன். ஏனென்றால்... கனவு செலவில்லாதது. அதனால் கண்டேன் என்று சொல்லிவிட்டு அவர் பாட்டுக்கு நடந்து போய் கல்லறையில் உட்கார்ந்து கொண்டார்.

ஒருத்தன் எப்படிப்பட்டவன் என்பது சாகப்போற சமயத்தில்தான் தெரியும் என்பதை விளக்குவதற்காகச் சொல்லப்பட்ட கதை இது.

இந்தக் காலத்து ஆசாமி ஒருத்தன் சாகக்கிடந்தான். சுற்றிவர சொந்த பந்தமெல்லாம் உட்காந்திருந்தார்கள்.

கடைசியாக டாக்டர் வந்து கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு "ஆள் இறந்துவிட்டார்" என்கிறார்.

அவனைப் பாடையில் தூக்கிவைத்துக் கொண்டு போனார்கள்.

பாதி வழியில் பாடையிலிருந்தவன் எழுந்து உட்கார்ந்து "நான் இன்னும் சாகவில்லை... உயிர் இருக்கு..." என்று மெதுவாக சொன்னான். தூக்கிக் கொண்டு போன நால்வரில் ஒருவன் அவனைப் பார்த்து... "நீ செத்துப் போய்விட்டதாக டாக்டர் சொல்லி விட்டார். அவரைவிட நீ என்ன விடயம் தெரிந்தவனா? பேசாமல் படுடா" என்று சொல்விட்டு எல்லோரும் இன்னும் வேகமாக நடக்க ஆரம்பித்தனர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*






உடுவில் மான்ஸ் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். குபேரநாதன் உரையாற்றுவதையும் வெற்றிபெற்ற மாணவர்களுடன் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம், வித்தியாலய அதிபர் செல்வி றூபி இராசரத்தினம் மற்றும் ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

### கிளிநொச்சி மாவட்டத்தில்

## மிதிவெடியகற்றப்பட்டுள்ள பிரதேசங்களில் மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் மிதிவெடி அகற்றப்பட்டுவரும் பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேறுவதற்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினால் கடந்த 3 மாதங்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் பணிகள் நடைபெற்று வந்தன. மேலும் தஹலோறஸ்ற் டெனிஸ் டீமைனிங் குழு மற்றும் சிறிலங்கா இராணுவ பொறியியல் பிரிவைச் சேர்ந்த மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவினராலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கரைச்சி உதவி அரசாங்க பிரிவில் உள்ள ஆனந்தபுரம், விவேகானந்தநகர், கணேசபுரம் ஆகிய இடங்களிலும் கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள குமரபுரம், உமையாள்புரம் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள முல்லையடி, பளை, புலோப்பளை கிழக்கு, மேற்கு போன்ற இடங்களிலும் தொழில்நுட்பமற்ற முறையில் மிதிவெடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஆய்வுகள் மேற்கொண்டதன் பின்னர் இப்பிரதேசங்களில் மக்களை மீள்குடியமர்த்த முடியுமென யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகர் வரதராஜா முருகதாஸ் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு உறுதி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-4-30)

## இராசி பலன்

*22-02-2010*
*(மாசி 10, திங்கட்கிழமை)*
*அட்டமி பிற்பகல் 1.23 மணிவரை*
*ரோகினி பின்னிரவு 2.57 மணிவரை*
*இராகுகாலம் 8.01-9.31 மணிவரை*
*சுபநேரம் 12.31-2.01 மணிவரை*
*அட்டமி, நவமி*

| | |
|---|---|
| மேடம் | விதண்டாவாதம், தனவிரயம், முயற்சி தாமதம், தொழில் விருத்தி. |
| இடபம் | வெகுமானம், சயன சுகம், நல்ல முயற்சி, தன விரயம். |
| மிதுனம் | பிறருக்கு உதவுதல், சோம்பல் நிலை, காரிய அலைச்சல், போசன சுகம். |
| கடகம் | பொருள் சேர்க்கை, சயன சுகம், முயற்சி கைகூடும், உறவினர் வருகை. |
| சிங்கம் | மனமகிழ்ச்சி, தொழில் நன்மை, நோய் குணமடைதல், நல்ல செய்தி. |
| கன்னி | உத்தியோக பங்கம், பிரயாணம், பெரியோர் சந்திப்பு, தன விரயம். |
| துலாம் | கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், வீண்பகை, போசன நன்மை. |
| விருச்சிகம் | மனோதைரியம், அபூர்வ சந்திப்பு, பாராட்டு, காரிய அனுகூலம். |
| தனுசு | செய்தொழில் முன்னேற்றம், பகைவர் நேசம், போசன சுகம், உடல் நலம். |
| மகரம் | வியாபார நன்மை, காரிய இடையூறு, பண விரயம், குடும்பக் கவலை. |
| கும்பம் | மாதா சுகம், ஆழ்ந்த சிந்தை, சுபசெலவு, முயற்சி தாமதம். |
| மீனம் | சகோதரர் உதவி, நற்கீர்த்தி, பொருள் சேர்க்கை, காரிய நன்மை. |

வளவன்

## இலங்கை வரும் பிரித்தானிய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் பிரித்தானிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பயங்கரவாதம் இல்லாது ஒழிக்கப்பட்டதன் பின்னர் 25 வீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக பிரித்தானியாவிலுள்ள சுற்றுலா சபையின் செயற்பாட்டுப் பணிப்பாளர் சஞ்சித பெரேரா தெரிவித்துள்ளார்.


பிரித்தானியாவில் தமது அமைப்பு இலங்கை தொடர்பாக முன்னெடுத்துவரும் பொய்ப் பிரசாரங்களை அந்நாட்டு பிரஜைகள் ஏற்றுக் கொள்வதில்லை எனவும் அவர் கூறினார்.

இலங்கைக்கு வருவதற்காக நீக்ருப் மற்றும் மென்சிஸ்ர விமான நிலையங்களுக்கு பெருமளவு பிரித்தானிய பிரஜைகள் வருகை தருகின்றனர்.

யால வனவியல் பூங்கா மற்றும் அருகம்பை போன்ற சுற்றுலாப் பிரதேசங்களைக் கண்டு களிப்பதில் இவர்கள் கூடுதல் ஆர்வம் காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 |
| தக்காளி | 80 | 90 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 60 |
| கரட் | 100 | 110 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 60 | 70 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 30 | 40 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 60 | 70 | 50 |
| வெண்டிக்காய் | 80 | 90 | 50 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 80 | 90 | 100 |
| லீக்ஸ் | 60 | 70 | 80 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 520 | 400 |
| போஞ்சி | 60 | 80 | 80 |
| கத்தரி தம்புள்ள | 20 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |



மருத்துவ கலாநிதி வெ.நாகநாதன் எழுதிய *சிறகை விரிப்போம்* மற்றும் *காதல் இனிதே* நூல் வெளியீடு நேற்று அகவொளி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அருட்பணி எஸ்.யே.இராஜநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும், எஸ்.ஜோசப்பாலா தலைமையுரையாற்றுவதையும், பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் நூலை வெளியிட்டு வைக்க சட்டத்தரணி ரி.சிவலிங்கம் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/வரணி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ந.நவரட்ணராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கோட்டக் கல்வி அதிகாரி கே. சிவானந்தன் கலந்துகொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் சி.துரைராஜா, சு.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களிற்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர். (6-ப)

## பொதுக்கூட்டமும் கௌரவிப்பும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சங்கமண்டபத்தில் நலன்புரிச் சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 2009 -2010 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சங்கப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற சங்க அங்கத்தவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-29)




## ஆசிரியர் அறிவுரைப்பு நூல்கள் வழங்கல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான 2010 ஆம் ஆண்டுக்கான அறிவுரைப்பு வழிகாட்டல் நூல்கள் வகை III தவிர்ந்த ஏனைய வகை பாடசாலை ஆசிரியர்களுக்கு இன்று திங்கட்கிழமை சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலையில் வைத்து வழங்கப்படவுள்ளதாக சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி கு.சிவானந்தம் அறிவித்துள்ளார். (4-29)

## அழகுக் கலை பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஐசிங், தலை அலங்காரம், தையல், கைத்தொலைபேசி திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகள் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை கல்லூரியின் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (6-4)

## நாடகப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கோரல்

திருமறைக் கலாமன்ற நாடகப் பயிலகத்தில் வருடாந்தம் நடாத்தப்பட்டுவரும் நாடகப் பயிற்சி நெறியின் 2010 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பயிற்சி நெறியானது நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புபவர்களுக்கும் நாடகமும், அரங்கியலும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பயில விரும்புவர்கள் யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும் என திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் தெரிவித்துள்ளார். (6-4)

## நூற்றாண்டு விழா

புங்குடுதீவு ஸ்ரீகணேசா கனிஸ்ட மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 3ஆம் திகதி வரை பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ். கே. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் இறுதிநாளான 3ஆம் திகதி இல்ல மெய்வல்லுநர் போட்டியும் முத்தமிழ் விழாவும் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட நிகழ்வாக தமிழகத்தின் தலைசிறந்த தமிழறிஞரும் எழுத்தாளருமான சுகி சிவம் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளதுடன் நூல் வெளியீடும் இடம்பெறவுள்து.

இந்நிகழ்வில் மக்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக யாழ்ப்பாணத்திலிருந்து இலவச போக்குவரத்து சேவையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாடசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (6-4-37)

## தேசிய ரீதியில் சான்றிதழ்



வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட கீரிமலை நகுலேஸ்வரா ம.வி.ஆசிரியரும் புதிய உயர் கல்லூரி விரிவுரையாளருமான செ.கமலக்கண்ணன் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கான Micro Soft ஆகியவற்றின் அனுசரண்ணயுடன் பாடசாலைக் கல்வி மென்பொருள் ஆக்கம் தொடர்பாக அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்று பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 2009 ஆம் ஆண்டிற்கான வழமையை மாற்றி புதுமையை ஏற்படுத்தும் ஆசிரியர்களுக்கான விழாவில் கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்தவினால் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (6-17)

## டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் டெங்கு ஒழிப்பை மெற்கொள்ளுமுகமாக நேற்று சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் இராணுவத்தினர் போன்ற பலர் கலந்து கொண்டு நுளம்பு பெருகக் கூடிய சுற்றுப்புறங்களை சுத்தம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (6-30)

## வீதி திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

(வேலணை)

யாழ்ப்பாணத்திலிருந்து தீவகத்திற்கு செல்லும் பிரதான வீதியான பண்ணை வீதி முன்பு பழுதடைந்த நிலையில் காணப்பட்டதை அடுத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இவ் வீதியின் முன்பக்கமாக 1 கிலோமீற்றர் தூரத்திற்கான திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதற்கட்ட பணியாக வீதியின் ஒரு பகுதியில் கடலிலிருந்து 1 கிலோமீற்றர் தூரத்தினை அளந்து இலக்கமிடப்பட்ட தடிகள் நாட்டப்பட்டுள்ளதாகவும் மேலும் இவ் வீதி 1 கிலோமீற்றர் தூரத்துக்கு மட்டுமே அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப் புனரமைப்பு பணிகளுக்கு இவ் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களே ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் இவ் வீதியானது தற்காலத்தில் ஏற்பட்ட அமைதியான சூழலை அடுத்து பெரும் எண்ணிக்கையான மக்கள் பயணம் செய்வதாகவும் தென்னிலங்கையிலிருந்து அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் தீவகத்திற்கு பயணம் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் போக்குவரத்துக்காக எஞ்சிய வீதியும் புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-4-22)

## யாழ்.மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்படக்கூடிய இடங்களை தெரிவு செய்து அழிவுகளை குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி வீதிகள், கால்வாய்கள், வடிகால்கள், நீர்நிலைகள், கைவிடப்பட்ட சதுப்பு நிலங்கள், பாலங்கள், குளங்கள், கட்டடங்கள் மற்றும் வைத்தியசாலைகள், பாடசாலைகள், பொதுஇடங்கள், சமயத் தலங்கள், விடுதிகள், ஏனைய அரச திணைக்களங்கள் போன்ற இடங்களில் வெளிக்கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பாக உரியவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு அவர்களின் கருத்துரைகளை உள்வாங்கி இந்நிகழ்ச்சித திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு யாழ். மாவட்ட செயலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (6-30)

## விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக்தினால் 2010-2011 கல்வியாண்டுக்கான பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளும்போது தேசிய அடையாள அட்டை, முதல் நியமனப் பத்திரம், சேவையை உறுதிப்படுத்திய பாடசாலை அதிபரின் கடிதம் ஆகியவற்றை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (4)

## கணனி வலையமைப்புடன் இணையும் ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை மத்தியப்படுத்தப்பட்ட தரமுயர்த்திய கணனி வலையமைப்புடன் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்கு இணைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கஜமுகன் ஹாட்வெயர் நிறுவன உரிமையாளர் இ.எஸ்.பி.நாகரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதேவேளை யாழ். பல்கலைக்கழக கிளையும் இச் சேவையை இன்று காலை 9 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளதுடன் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் நா. சண்முகலிங்கன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (4)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 14

யாழ்ப்பாண வைபவமாலை தரும் சான்றுகளை ஆராய்வதன் மூலம் வையாபாடலிலே கூறப்படும் வன்னியரின் படையெடுப்பு எக்காலகட்டத்தில் நடைபெற்றதென்பதை ஓரளவிற்கு அறிந்துகொள்ள முடியும். அந்நூல் வன்னியரின் குடியேற்றம் பற்றி மேல்வருமாறு கூறும்.

குளக்கோட்டு மகாராசன் கோணேசர் கோயிலின் திருப்பணிகளை நிறைவேற்றி அவ்வாலயப் பணிவிடைகளைப் புரிவதற்கும் செலவு, வரவுகளுக்காக ஏழு நாடுகளில் வயல் நிலங்களையும் தோப்புகளையும் ஏற்படுத்தி அவைகளிற் பயிரிட்டு வருமானம் செலுத்தும்படி வன்னியர்களை அழைப்பித்துக் குடியிருத்தித் தன் நாட்டுக்கு மீண்டான்.

அந்நாள் முதல் அவ்வருமானங்களால் ஆலயப் பணிவிடைகளும் அந்தணர் அக்கிரகாரங்களும் மடங்களும் சம்பிரமமாகச் சிறந்து வந்தன. சில காலத்தின் பின் குளக்கோட்டு மகாராசன் தேகவியோகமடைந்தான்.

அதன்பின் மேற்கூறிய ஏழு நாடுகளிலும் பயிர்க்குடிகளாகவிருந்த வன்னியர்கள் மிகவும் பரவியிருந்தார்கள். பாண்டி நாட்டிலிருந்து ஐம்பத்தொன்பது வன்னியர்களும் வந்து அவர்களுடன் கூடினார்கள்.குடிசனங்கள் வரவரப் பெருகி அதிகரிக்கப்பட்டமையால் அரசாட்சியின்றி வெகுவிதக் கலகங்கள் பல காலம் நேரிட்டது. அவ்வேழு நாடுகளின் வருமானங்களும்கோணேசர் கோயிலுக்குச் செல்வனவேயன்றி கண்டிநாட்டு அரசர்கள் அவைகளைப் பாராமுகம் பண்ணிவிட்டார்கள். அக்காலத்தில் சந்திர வன்னியனும், வேறு அநேக குறுநில மன்னரும் ஒருவரின் பின் ஒருவராகத் தோன்றியழித்த பின் அவ்வன்னியர் அனைவரும் ஒத்திணங்கித் தங்கள் சாதியில் தலைப்பட்ட ஏழுபேரைத் தெரிவு செய்து அவ்வேழு நாடுகளுக்குத் தலைவர்களாக்கி விட அவர்களின் கீழ் வன்னியர் அடங்கியிருந்தனர். இவைகளை வன்னியர்களாண்டு வந்ததால் அவ்வேழு நாடுகளும் வன்னி நாடுகள் என அழைக்கப்பட்டது...

கோணேசர் கல்வெட்டு,வையாபாடல் ஆகியவிரண்டிலும் வருகின்ற கதைகளை ஆதாரமாகக் கொண்டே மயில் வாகனப் புலவர் வன்னிக்குடியேற்றம் பற்றிக் கூறியுள்ளார். இருவேறு காலகட்டங்களில் வன்னியிலே தமிழரின் குடியேற்றங்கள் ஏற்பட்டவென்பது மயில்வாகனப் புலவரின் கருத்தாகும். முதலாவது குடியேற்றம் கோணேசர் கல்வெட்டிலே சொல்லப்படுவது. அது குளக்கோட்டு என

## வையாபாடல்

வழங்கிய சோழகங்கன் காலத்தைச் சேர்ந்தது.

ஆயினும் குளக்கோட்டன் திருகோணமலை, கட்டுக்குளம் ஆகியவிடங்களில் மட்டுமே குடிகளை நிறுவியதோடு அங்கு வன்னிபங்கள்ளையும் நியமித்தான் எனக் கோணேசர் கல்வெட்டுக்கூறும். அடங்காப்பற்றிலே குளக்கோட்டன் வன்னிபங்களை நியமித்தானென்றோ குடிகளை இருத்தினானென்றோ கூறவில்லை. இரண்டாவது வன்னிக் குடியேற்றம் பிந்தியவொரு காலகட்டத்திலே பாண்டிநாட்டிலிருந்து வந்த ஐம்பத்தொன்பது வன்னியர்களால் ஏற்பாடாகியதென்பது மயில்வாகனப் புலவரின் முடிவு.

வையாபாடல் கூறுமாப்போல அரசனுக்குப் பெண் கொண்டு வந்த வன்னியரே அடங்காப்பற்றை கைப்பற்றினர் எனக் கொள்ளமுடியாது. வையாபாடலின் அகச்சான்றுகளை அவதானிக்கு ம்போது அந்த நூலிலே கூறப்படும் வன்னிக் குடியேற்றம் படையெடுப்புக்களின் விளைவாக ஏற்பட்ட ஒன்றாகவே தோன்றும். ஐம்பத்தொன்பது வன்னியரும் பாண்டிநாட்டால் வந்தனரென்று சொல்லப்படுவதால் பாண்டியப்படையெடுப்புக்களின் விளைவுகளுள் ஒன்றே வையாபாடல் கூறும் வன்னிக்குடியேற்றம் எனக் கொள்வது சாலப்பொருந்தும் . பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்கூற்றில் முன்கண்டவாறு , இலங்கையைப் பல தடவையாகப் பாண்டியப்படைகள் தாக்கியிருந்தன.

அப் படையெடுப்புக்களின் விளைவாகவே யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்தியின் ஆட்சி ஏற்பாடாகியது. யாழ்ப்பாணத்து முதலரசன் காலத்திலே வன்னியரின் குடியேற்றம் நடைபெற்றதென்ற ஐதீகம் வையாபாடலில் வருவதால் வட இலங்கையிலாண்ட முதலரசனின் –சிங்கையாரியன் என வழங்கிய முதலாம் ஆரியச் சக்கரவர்த்தியின் காலத்திலே பாண்டி நாட்டிலிருந்து ஐம்பத்தொன்பது வன்னியரும் இலங்கைக்கு வந்தனர் எனக்கருதலம்.


வையாபாடலின் சான்றுகளும் இதற்காதாரமாயுள்ளன. வன்னியர்கைப் பற்றிய இடங்களுள் பெரும்பாலானவை யாழ்ப்பாண மன்னரின் ஆதிக்கத்துக்குள்ளிருந்தன. சேதுபதி "திறலரசு புரியும் வீரன்" , " செருக்குற்ற ஆரிய வம்சத்தார்" என்போரும் வன்னியர்களோடு வந்தார்கள் என்று வையாபாடல் கூறுவதால் சேது நாட்டிலிருந்து வந்த ஆரியச் சக்கரவர்த்திகளோடு இவ் வன்னியர் வந்தனரென்ற கருத்து உறுதியாகின்றது.

மேலும், பாண்டிமழவன் எனப் பெயரிய சில தலைவர்கள் வன்னியரோடு வந்தனரென்றும், மதுவீரமழவராயன் , மழவராயன் என்போர் அரசனோடு யாழ்ப்பாணத்தில் இருந்தனரென்றும் வையாபாடல் கூறுகின்றது.

எனவே, ஆரியச்சக்கரவர்த்தியின் படையெடுப்போடும் அதன்பின் யாழ்ப்பாணத்தின் முதலாம் ஆரியச் சக்கரவர்த்தி ஆட்சி புரிந்த காலத்திலும் வையாபாடலில் வரும் வன்னியருள் பலர் அடங்காப்பற்றுக்கு வந்தனர் என்ற கருத்து வலுப்பெறுகின்றது.

பேராசிரியர்
சி.பத்மநாதன்

கைலாய மாலை முதலாம் ஆரியச் சக்கரவர்த்தியின் ஆட்சியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிகாரம் பெற்றவர்களின் விபரங்களைத் தருகையில் வையாபாடல் அம் மன்னது காலத்தில் வன்னி நாடுகளைக் கைப்பற்றிய பிரதானிகள் சிலரைப்பற்றிக் கூறுகின்றதென்று கொள்ளலாம். (தொடரும்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் விருந்தினர்கள் இறைவணக்கம் செலுத்துவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பொறியியலாளர் சே.அனந்தசயனன் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## கட்சி அலுவலகம் திறந்து வைப்பு

(வடமராட்சி)

ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) கட்சி வடமராட்சி மாலுசந்தியில் தமது ஆட்சி அலுவலகத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்துள்ளனர்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலையடுத்து கட்சி செயற்பாடுகளுக்காக வடமராட்சி பிராந்திய செயலகக் கட்சி பிரமுகர் ஒருவரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(6-4-10)

## இணையத்தளங்களை தடைசெய்யும் திட்டத்தை நிறுத்த ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

சீன ஆதரவுடன், இலங்கையில் இணையத்தளங்களை தணிக்கை மற்றும் தடைசெய்யும் திட்டத்தை கைவிடுமாறு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

செய்தி இணையத்தளங்களுக்கு தணிக்கையை ஏற்படுத்தி அதன் ஊடாக அவற்றிற்கு அனுமதிப் பத்திரங்களையும் செயற்பாட்டு கட்டணங்களையும் விதிப்பதை நோக்காகக் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருந்ததாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஏற்கனவே 'லங்கா இ நியூஸ்', ' லங்கா நியூஸ் வெப்" ,"தமிழ் கார்டியன்" மற்றும் "தமிழ்நெற்" என்பன இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் ஏனைய செய்தி இணையத்தளங்களை கட்டுப்படுத்துவதன் மூலம் இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் புதிய இணையத்தள நடைமுறைகளுக்கு குறித்த இணையத்தளங்கள் உட்பட வேண்டும் என்பதே அந்த ஆணைக்குழுவின் நோக்காக இருந்தது.

எனினும் செய்தி இணையத்தளங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான எந்த ஒரு உத்தரவும் தமக்குக் கிடைக்கவில்லை என தொலைத் தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் அனுஸ பல்பிட்ட தெரிவித்துள்ளார்.

இணையத்தளங்களை கண்காணிப்பது தமது ஆணைக் குழுவின் பணியல்ல எனக் குறிப்பிட்ட அவர், எனினும் சில இணையத்தளங்கள் பொய்யான செய்திகளை பரப்புகின்றன எனக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, இணையத்தளங்களை தடைசெய்யும் திட்டத்தை உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த போதும், தாம் அவ்வாறான திட்டம் ஒன்றுக்கு நிதியளிக்க தயார் இல்லை என உலக வங்கி அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (6-4)

## சரத்பொன்சேகாவின் சொத்து விபரங்கள் திரட்டப்படவுள்ளன

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக சூழ்ச்சி மேற்கொண்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவின் சொத்து விபரங்கள், குற்ற விசாரணை திணைக்களத்தினால் திரட்டப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல்காலத்தில் சரத்பொன்சேகா வெளியிட்ட சொத்து விபரத் தகவல்களின் போது ஆறரை இலட்சம் ரூபா தம்மிடம் காணப்படுவதாக அறிவித்திருந்தார்.

எனினும், கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக ஜெனரல் சரத் பொன்சேகா பாரியளவு பணத்தை செலவிட்டுள்ளதாகவும், இந்தப் பணம் எவ்வாறு கிடைக்கப் பெற்றது என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஜெனரல் சரத் பொன்சேகாவின் உறவினர்களிடமிருந்து பெருந்தொகை வெளிநாட்டு நாணயங்கள் மீட்கப்பட்டதனைத் தொடர்ந்து சொத்து விபரங்களைத் திரட்டும் நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை, இராணுவ சேவையில் கடமையாற்றிய காலத்தில் ஜெனரல் சரத் பொன்சேகா அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(6-4)





ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் விளையாட்டுப்போட்டி நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட ஆசிரிய ஆலோ சகர் திருமதி அம்பிகைபாகன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட செ.குபேரநாதன்,அதிபர் ந.பிரதா ஆகியோர் நிற்பதையும்,மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# சரத்பொன்சேகா சொகுசு அறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

ஜெனரல் சரத்பொன்சேகா சொகுசு அறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடற்படைக்குச் சொந்தமான சொகுசு வீடு ஒன்றில் ஜெனரல் சரத்பொன்சேகாவை தடுத்து வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்செயலாக தாம் தேர்தலில் தோல்விய டைந்திருந்தால் சரத்பொன்சேகா தம்மை போகம்பரை சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்பார் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் சட்டத்தரணிகளை சந்திப்பதற்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொன்சேகாவின் மனைவி அடிக்கடி அவரை பார்வையிடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத்பொன்சேகா கைது விவ காரம் எந்த வகையிலும் அரசியல் பழி வாங் கல் நடவடிக்கையாக கருதப்பட முடியாது என தெரிவித்துள்ள அவர் பௌத்த மதத்தின் அடிப்படையில் வினைப்பயன்களை அதே ஜென்மத்தில் அனுபவிக்க நேரிடும் எனவும் தமக்கு அதில் நம்பிக்கை இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (6-4)

# ஐ.ம.சு கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கு ஜாதிகஹெல உறுமயவினால் கோரிக்கைகள் முன்வைப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் தங்கள் கட்சி போட்டியிடுவதானால் தேசியப் பட்டியலில் தமது கட்சியைச் சேர்ந்த இருவருக்கு இடம்வழங்கப்படுவதுடன் தாம் பெயர் குறிப்பிடும் ஐவரை வேட்பாளர்களாக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜாதிக ஹெல உறுமய முன் வைத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த கட்சியின் மாநாட்டிலேயே இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

ஜாதிகஹெல உறும்யவின் தலைவர் வண. எல்லாவல மேதானந்த தேரர் செயலாளர் வண. ஓமபிள சோபித தேரர் ஆகியோர் தேசியப் பட்டியில் இடம்பெற வேண்டும் என்றும் வண. அத்துரலிய ரத்னதேரர் (கம்பஹா) , சம்பிக்கரணவக்க (கொழும்பு), சாந்த ஜயதிலக்க (கஞத்துறை), சட்டத்தரணி ஜயரத்ன (கண்டி) ஆகியோர் வேட்பாளர்களாக தமது கட்சியின் சார்பில் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப் பட்டது. (6-4)

# தேர்தல் கண்காணிப்பில் 8 ஆயிரம் உள்நாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தத்திட்டம்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்க 8 ஆயிரம் உள்நாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தவுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையின் சகல மாவட்டங்களுக்கும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட 50 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் வரவழைக்கப்படவுள்ளனர்.

உள்நாட்டு கண்காணிப்பாளர்களில் ஆயிரத்து 500 பேர் சுயாதீனமாக இயங்கக் கூடியதாகவும் பொதுவான கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவர் எனவும் கண்காணிப்பாளர்களை தயார்படுத்தும் நடவடிக்கைகளில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது. (6-4)

# தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடு?

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் செயலகத்தின் விதிமுறைகளை மீறிச் செயற்படும் அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பிலேயே இவ் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதேவேளை 600 அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பாக தேர்தல் செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் உயர்நீதிமன்றின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறு தேர்தல் செயலகத்தின் ஒரு தொகுதி அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர் எனவும்.

வேட்பு மனுத்தாக்கல் செய்யும் காலம் முடிவடையும் வரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டியதில்லை என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிகிறது.

மேலும் கடந்த ஜனாதிபதித்தேர்தல் காலத்தில் தேர்தல் ஆணையாளரினால் பிறப்பிக்கப்பட்ட 100க்கும் மேற்பட்ட உத்தரவுகளில் ஒரு சில மட்டுமே நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# அரசின் அழுத்தம் காரணமாகவே ஒன்றுகூடலை கைவிட்டிருந்தோம்

## பௌத்த சங்கப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு மேற்கொண்ட அழுத்தம் காரணமாகவே இந்த வாரம் நடைபெறவிருந்த ஒன்றுகூடலை பௌத்த துறவிகள் கைவிட்டிருந்தனர் என அதன் பேச்சாளர் அதங்கனி ரட்னபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பௌத்த மதத் தலைவர்கள் கடந்த வியாழக்கிழமை ஒரு ஒன்றுகூடலை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தனர்.

அரசினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான அழுத்தங்களை மேற்கொள்வதே அதன் நோக்கம்.

எனினும் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகளில் தமது பாதுகாப்புக்களை கருத்தில் கொண்டு பௌத்த மதத் தலைவர்கள் இந்த ஒன்றுகூடலை இறுதிநேரத்தில் நிறுத்தியிருந்தனர்.

கண்டியில் உள்ள தலதா மாளிகையில் கலந்துரையாடல்களை மேற்கொள்வது என திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் இந்த கூட்டத்தை நடத்தக்கூடாது என அரசின் பிரதிநிதிகளும் அரசுடன் இணைந்து செயற்பட்டு வரும் பௌத்த துறவிகளும் கடுமையான அழுத்தங்களை மேற்கொண்டிருந்தனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளர்.

இதனிடையே குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் என்ற அச்சுறுத்தல்களும் பௌத்தமத தலைவர்களுக்கு விடுக்கப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒன்றுகூடல் இடம்பெற்றால் தலதா மாளிகையில் குண்டுவெடிப்பு நிகழும் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

# அரசியல் சாசன திருத்தம் குறித்து

# பிரதான கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இடையில் இரகசிய பேச்சுவார்த்தை

(கொழும்பு)

அரசியல் சாசனத்தில் திருத்தங்களை ஏற்படுத்துவது தொடர்பில் பிரதான கட்சிகளின் சிரேஸ்ட உறுப்பினர்களுக்கு இடையில் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட அமைச்சர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்களும் இந்த இரகசிய பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் அடிப்படையில் இந்த பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் மேற்கொள்ளப்படும் அரசியல் சாசனத் திருத்தங்களுக்கு ஆதரவளிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இப்பேச்சுவார்ததையின் போது உறுதியளித்துள்ளதாக தெரிகிறது.

மேலும் ஜனாதிபதிக்கும் பாராளு மன்றத்திற்கும் இடையில் நேரடித் தொடர்பினை ஏற்படுத்தல், நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமையை உருவாக்குதல், தேர்தல் முறைமையை மாற்றியமைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# ஆயுள்வேத மருத்துவம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

மருத்துவ துறையை பொறுத்த வரைக்கும், குணப்படுத்துவது என்பது அடிப்படையான செயல். ஆனால் அதை இயற்கை மற்றும் இயற்கை சார்ந்த விளைபொருட்கள் மூலம் குணப்படுத்துவது தான், ஆயுள்வேத மருத்துவத்தின் நோக்கமாகும்.

மேலும், நோய் வருவதற்கு முன் தடுப் பதே ஆயுள்வேத மருத்துவத்தின் கொள்கையாகும். உலக மருத்துவத் துறையில் ஆயுள்வேதம் சிறப்பான வளர்ச்சியை பெற்றுள்ளது. நவீன மருத்துவ துறை மூலம் மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறையில், நோய்களுக்கு எதிராக குணப்படுத்தும் முயற்சியில் சிறப்பாக செயல்பட முடியாது. ஆனால் ஆயுள்வேத மருத்துவமானது எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாமல் இயற்கையான முறையில் சிறப்பாக செயல்படக் கூடியது.

### இந்திய பல்கலைக்கழகங்களில் ஆயுள் வேதம் படிப்பு

### *இளநிலை ஆயுள்வேத படிப்பு*

பி.எம்.பி.எஸ். (இளநிலை ஆயுள்வேதம் மற்றும் அறுவை சிகிச்சை) எனும் இளநிலை ஆயுள்வேத படிப்பானது ஐந்தரை ஆண்டு காலம் (நாலரை ஆண்டு படிப்பு மற்றும் ஒரு வருட பயிற்சி) பயிலக் கூடியது.

### தகுதிகள்

மாணவர்களின் வயது 17 முதல் 25க்குள் இருக்கவேண்டும். க.பொ.த. உயர்தரத்தில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடத் தேர்வு செய்து படித்திருக்க வேண்டும். நுழைவுத்தேர்வு அல்லது க.பொ.த. உயர்தரத்தில் எடுத்த பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

### முதுநிலை ஆயுள்வேத படிப்பு

எம்.டி.ஆயுர்வேதா எனும் முதுநிலை படிப்பானது மூன்று ஆண்டு காலம் பயிலக் கூடியது.

தகுதிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பி.ஏ.எம்.எஸ்.முடித்திருக்க வேண்டும். அல்லது அங்கீகாரிக்கப்பட்ட பல்கலைக் கழத்தில் எம்பியிஎஸ் தேர்ச்சி பெற்றி ருக்க வேண்டும்.

தற்போது இந்தியாவில் ஆயுள்வேத கல்வியானது, இந்திய மருத்துவ மத்திய கவுன்சில் எனும் அமைப்பின் கீழ் செயல்பட்டு வருகிறது. இது மத்திய அரசின் சட்ட திட்டத்திற்கு கட்டுப்பட்டது. தற்போது இந்தியாவில் 154 இளநிலை படிப்புக்குரிய ஆயுள்வேத கல்லூரிகளும், 33 முதுநிலை படிப்புக்குரிய ஆயுள்வேத கல்லூரிகளும் உள்ளன.

தமிழ் நாட்டில் உள்ள ஆயுள்வேத மருத்துவ கல்லூரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படுகிறது.

- ஆர்.வி.எஸ். ஆயுள்வேத கல்லூரி, கோயம்புத்தூர்
- தம்மா ஆயுள்வேத கல்லூரி, ஸ்ரீ பெரும்புதூர்
- ஸ்ரீ சங்கரா ஆயுள்வேத கல்லூரி, திருச்சி
- ஸ்ரீ சாய்ராம் ஆயுள்வேத மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் காஞ்சிபுரம்
- ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி ஆயுள்வேத கல்லூரி, திருவள்ளூர்

### வேலைவாய்ப்புகள்

ஆயுள்வேத மருத்துவத்துக்குரிய வேலை வாய்ப்புக்கள் உலகம் முழுவதும் பெருமளவில் உள்ளன. தற்போது குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் ஆயுள்வேத மருத்துவம் புகழ்பெற்று வருகிறது. ஆயுள்வேத மருத்துவ முறையில், சிகிச்சை மேற்கொள்வதற்காக, உலகம் முழுவதிலிருந்து ஏராளமான நோயாளிகள் இந்தியா செல்கின்றனர்.

இனிவரும் காலங்களில் ஆயுள்வேத மருத்துவர்களின் தேவை அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை

# திருப்தியான வருமானம் தரும் பிஸ்னஸ் போட்டோகிராபி துறை

ஒரு புகைப்படம் ஆயிரம் வார்த்தைகளுக்கு சமமானது என்று சொல்லப்படுகிறது. சில நேரங்களில் எத்தனை வார்த்தைகளாலும் சொல்ல முடியாததை ஒரு புகைப்படம் உணரச் செய்து விடும். தாங்கள் கண்டு வியந்த இடங்கள், உயிரினங்கள், இயற்கை ஜாலங்களைச் சேமித்து வைக்கவும் மீண்டும் பார்த்து பூரிப்படையவும் இந்த விஞ்ஞான வளர்ச்சி நமக்கு உதவுகிறது.

இந்தச் கலையுணர்வுக்கு சற்று முக்கியத்துவம் அளித்து உங்களது ஆர்வத்தை அதிகப்படுத்தி சிறந்த புகைப்படங்களை எடுப்பதில் இரசனையை மெருகேற்றினால் மனத்திருப்தியுடன் வருமானமும் கிடைக்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

வருமானம் அதிகம் பெறுபவர்களும் தங்களது பணியில் போதிய திருப்தி அடையாமல் இருப்பதைக் காணமுடியும். ஆனால் இவற்றுக்கு விதிவிலக்காக போட்டோகிராபி துறை உள்ளது. இத்துறையில் தங்களது ஆர்வத்தை வெளிக்காட்டும் அளவிற்கு ஒருவரது கலையுணர்வு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இன்றைய விஞ்ஞான வளர்ச்சியால் நவீன தொழில் நுட்பங்களை அடக்கிய கமராக்கள் செய்யும் வித்தைகள் பல.

போட்டோகிராபி துறையில் முழுநேரமாக ஈடுபட்டுள்ளவர்கள் அதிகம் பேர் இருக்கின்றனர். பணிபுரிந்து கொண்டே தங்களது திருப்திக்காக இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அதைவிட அதிகம். இவர்களில் பகுதி நேரமாக இத்துறையில் ஈடுபட விரும்புவர்களுக்கு வருமானத்தை ஈட்டித் தர பிசினஸ் போட்டோகிராபி உதவுகிறது.

இதில் வெற்றி பெற தனித்துவம் மிக்க புகைப்படங்கள் (புரபஷனல்ஸ் போட்டோகிராபி) எடுக்கும் திறன் தேவை . பொதுவாக சிறந்த புகைப்படம் எடுப்பதே புரபஷனல் போட்டோ கிராபியாகக் கருதப்படுகிறது. அவ்வாறு சிறந்த புகைப்படம் எடுப்பவர்கள் அதைச் சரியான முறையில் விற்கத் தெரிந்தால் போதும். இவை தான் பிஸ்னஸ் போட்டோகிராபிக்கு அடிப்படை.

சிறந்த புகைப்படம் எடுப்பதற்கு என்ன தேவை? புகைப்படம் எடுப்பதில் அறிவு மற்றும் அனுபவம் வேறுபட்ட அதே சமயம் சரியான கோணத்தில் ஒன்றைப் பார்க்கும் கலையுணர்வு. கமராக்களை முறையாகக் கையாள்வது. கமரா லைட்டிங் உட்பட தொழில் நுட்ப அறிவு.

### வியாபாரத் திறன்கள்

விளம்பரம், விற்பனை செய்யும் திறன் ஆகியவை அடங்கிய சந்தைப்படுத்தும் திறமை, நிர்வகிக்கும் திறமை, ஆவணங்களைப் பாதுகாக்கும் திறன் இவை தவிர தகவல் தொடர்புத்திறன் தொடர்ந்து கற்றுக் கொள் ளும் மனப் பக்குவம் பணிவு போன்றவற்றை யும் பெற்றிருப்பது உங்களது வெற்றிக்கு அடிகோலும்.

இயற்கை அழகுடன் சந்தையில் கிராக்கியுள்ள படங்களை கமராக்களில் பதிவு செய்யும் வியாபாரயுக் தியையும் கற்றுக் கொள்வது சிறந் தது. புகைப்படங்களை சந்தைப் படுத்துவதற்கு இணையத் தளங்கள் உதவுகின்றன.

### திட்டமிடுதல்

ஒவ்வொரு பிஸ்னஸ் போட்டோகிராபியும் வியாபாரதிட்டமிடலுடன் ஆரம்பமாகிறது. எந்த ஒரு புதிய வியாபாரத்திற்கும் முதலீடு ஒரு முக்கிய காரணியாக உள்ளது. எனவே திட்டமிடுவதில் நிதி உதவி முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக சிறந்த புகைப் படம் எடுப்பதற்குத் தேவையான தொழில் நுட்பங்களுக்கும் அவற்றைச் சந்தையிடு வதற்கும் தேவையான நிதியை திட்டமிடுவது மிக அவசியம். துறையில் உள்ள நுணுக்கங்கள், தற்போது சந்தையில் உள்ள வாய்ப்புகள், போட்டிகள் ஆகியவற்றை அறிந்து உங்களது பொருளுக்கான தரத்தை மேம்படுத்தி விற்பனை யுக்தியையும் திறம்படச் செயற்படுத்தினால் வெற்றி உங்கள் பக்கம் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.



# பதட்டம் குறைக்க பயிற்சிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

### மூச்சு விடுதல் பயிற்சி

மூச்சு விடுதல் பயிற்சி என்பது அதிக அளவு மூச்சுக்காற்றை உள்ளிழுத்து அந்த மூச்சுக் காற்றை வெளியிடும் பயிற்சியாகும். இப் பயிற்சியை செய்ய விரும்புவர்கள் தரையில் துணியை விரித்து அதன்மீதுஅமர்ந்து கொள் ளுங்கள். இப்பொழுது உங்கள் இரு கண்களையும் இறுகமூடிக்கொள்ளுங்கள்.

உங்கள் வலது பக்க மூக்குத் துவாரத்தை வலது கைப்பெருவிரலால் அழுத்தி மூடிக் கொள்ளுங்கள். இடது மூக்கின் வழியாககாற்றை மெதுவாக உள்ளிழுத்து கொள்ளுங்கள். பின்பு மெதுவாக காற்றை வெளியிடுங்கள். இப்படி 5முறை காற்றை மெதுவாக உள்ளிழுத்து, மெதுவாக வெளியிடுங்கள்.

அதன் பின்னர் மூக்கின் இடது புறமுள்ள துவாரத்தை இடது கை பெருவிரலால் அழுத்தி மூடிக்கொள்ளுங்கள். வலதுபுறமுள்ள மூக்குத் துவாரத்தின் வழியாக மெதுவாக காற்றை உள்ளே இழுங்கள். சிறிதுநேரம் கழித்து உள் ளிழுத்த காற்றை மெதுவாக வெளியே விடுங் கள். இப்படி வலது மூக்குத் துவாரத்தின் வழியாக 5 முறை காற்றை உள்ளே இழுத்து மெதுவாக வெளியே விடுங்கள். அதன் பின்னர் இடது கை பெருவிரலால் மூக்கிலிருந்து எடுத்துவிடுங்கள்.

இப்போது மூக்கின் இரண்டு துவாரங்களின் வழியாகவும் மெதுவாக காற்றை உள்ளே இழுத்துக்கொள்ளுங்கள். பின்னர் உள்ளிழுத்த காற்றை மூக்கின் இரண்டு துவாரத்தின்வழியே வெளியேற்றுங்கள். இப்படி திரும்பத் திரும்ப 5முறை இந்தப் பயிற்சியைச் செய்யலாம். இந் தப் பயிற்சியை செய்வதன்மூலம் இரத்தத்திற் குத் தேவையான அதிக ஒட்சிசன் கிடைக்கும். இத னால் மனஅழுத்தமும் குறையவும்வாய்ப்புள்ளது.

### தோற்பட்டைப் பயிற்சி

தோற்பட்டை பயிற்சியைச் செய்ய விரும்பு வர்கள் ஓரிடத்தில் வசதியாக அமர்ந்துகொள் ளுங்கள். உங்கள் தோற்பட்டையை மேலும் கீழும் 3அல்லது 4 முறை அசைத்துக்கொள் ளுங்கள். அதேபோல் தோற்பட்டையை முன்னும் பின்னும் அசைத்து வாருங்கள். இப்படி 4 அல்லது 5முறை செய்துபாருங்கள்.

அதன்பின்னர் திடீரென தோள் பட்டையின் நுனிப்பகுதி காதைத் தொடுகின்ற அளவுக்கு தோள் பட்டையை உயர்த்துங்கள். அதேபோல் திடீரென உயரத்தில் தோள்பட்டையை தளர்த் திக்கொள்ளுங்கள். இப்பநான்கு முறை செய் வதன்மூலம் களைப்பு கரைந்து போய்விடுகிறது. உற்சாகம் ஊற்றெடுக்கிறது.

### கழுத்தை அசைக்கும் பயிற்சி

கழுத்தை அசைக்கும் பயிற்சியைச் செய்ய விரும்புவர்கள் முதலில் இரண்டு பக்கமுள்ள தோற்பட்டைகளை தளர்த்திக்கொள்ளுங்கள். தலையை இடது புற தோள்பட்டை பக்கமாக சாய்த்துக் கொள்ளுங்கள். இப்பொழுது இடது காதுமடல், இடது தோள்பட்டையைத் தொடுமாறு வைத்துக் கொள்ளுங்கள்.

இப்போது மெதுவாக மூச்சை உள்ளிழுத்து மெதுவாக வெளியிடுங்கள். இப்படி நான்கு முறை செய்த பின்பு தலையை வலதுபுறமாக சரித்து வலது காதின் மடல் வலது கை தோள் பட்டையை தொடுமாறு செய்யுங்கள். இப்போது மெதுவாக காற்றை உள்ளிழுத்து மெதுவாக வெளியிடுங்கள்.

இந்தப் பயிற்சி செய்யும்போது எந்தப் பக்கம் தலையை சாய்க்கிறோமோ அந்தக் கையின் விரல்கள் தலையின் உச்சியைத் தொடும்படி பார்த்துக்கொண்டால் பயிற்சியின் பலன் அதிகரிக்கும். இதன்மூலம் களைப்பு நீங்கும். புத்துணர்ச்சியும் பெறலாம்.

### முன்பக்கம் வளையும் பயிற்சி

முன்பக்கம் வளையும் பயிற்சி மிகவும் எளிதான பயிற்சியாகும். இந்தப் பயிற்சியைச் செய்ய விரும்புவர்கள் முதலில் ஒரு நாற்காலியில் பின்பக்கமாக சாய்ந்து நிமிர்ந்து உட் கார்ந்துகொள்ளுங்கள். பின்னர் நன்கு மூச்சை உள்ளே இழுத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் இரு கைகளையும் பின்பக்கம் கொண்டுவாருங்கள். உங்கள் இடது ஒரு கை விரல்களினால் வலது கையை பிடித்துக் கொள் ளுங்கள். முன்பு உள்ளிழுத்து வைத்துள்ள மூச்சுக் காற்றை முன்பக்கமாக சாய்ந்து கொண்டு மெதுவாக வெளியே விடுங்கள்.

இப்படி நான்கு அல்லது ஐந்து முறை தொடர்ந்து செய்துவாருங்கள். பின்னர் பின் பக்கமாக இருந்த கைகளை முன்பக்கமாக மெதுவாகக் கொண்டு வந்து பயிற்சியை நிறைவு செய்யலாம். இந்தப் பயிற்சி தொடர்ந் தும் படித்துக்கொண்டிருக்கும்போது ஏற்படுகின்ற களைப்பை உடனே போக்கிக் கொள்ள உதவும். பதட்டத்தையும் நீக்கும்.

(பயிற்சிகள் வளரும்)

# அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்



## டோபல் தேர்வு –சில தகவல்கள்

ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்ட பிரித்தானியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் டோபல் என்னும் ஆங்கில மொழித் தேர்வு மூலமாகவே நாம் எந்தப் படிப்பிலும் சேர முடியும் என்பதை அறிவோம். இதை இ.டி.எஸ். என்னும் அமைப்பு நடத்தி வருகிறது. இந்தத் தேர்வு குறித்து சில முக்கி யமான தகவல்கள் இங்கே தரப்படுகின்றன.

இளநிலை மற்றும் பட்டப் படிப்பு முடித்த விண்ணப்பதாரர்களின் ஆங்கில மொழித்தி றன் அறிய சரியான தேர்வாக இருக்கும் டோபல் தேர்வை உலககெங்கும் 7ஆயிரத்து 300 கல்வி நிறுவனங்கள் அங்கீகரிக்கின்றன. இதில் 5 ஆயிரத்து 175 கல்வி நிறுவனங்கள் அமெரிக்கா மற்றும் கனடாவிலும் ஐரோப் பாவில் ஆயிரம் நிறுவனங்களும், பிரித்தானி யாவில் 200உம், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் 100உம், ஆசியாவில் 600 நிறுவனங்களும் உள்ளன. எஞ்சியவை ஆபிரிக்கா கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைசேர்ந்தவை.

130 நாடுகளை சேர்ந்த 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களின் பட்டியலா னது 'TOEFL DESTINATION DIRECTORY' என்னும் புத்தகத்தில் உள்ளது.

கடந்த ஆண்டில் மட்டும் 383 புதிய கல்வி நிறுவனங்களுக்கு டோபல் தேர்வுக்கான அங்கீ காரம் தரப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இது அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இப்படி எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருவதால் புதிய நிலையங்கள் ஆண்டு தோறும் இ.டி.எஸ் அமைப்பால் ஏற்படுத்தப்படுகின்றன.


உலகெங்கும் தற்போது 4 ஆயிரத்து 500 மையங்களில் இத்தேர்வை எழுதலாம்.

தேர்வு எழுதுபவர்களின் எண்ணிக்கை அதி கரித்தாலும் தேர்வு முறையை செயல்திறனுடனும் இலகுவாகவும் நடத்திட இ.டி.எஸ். அமைப்பு முயற்சித்து வருகிறது.

ஆண்டுதோறும் உலகின் பல நாடுகளிலும் 10 இலட்சம் பேர் இத்தேர்வை எழுதுகின்றனர். இத்தேர்வானது பல பல்கலைக் கழகங்களால் 45 ஆண்டுகளாக அங் கீகரிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# தலைவர்களுக்கிடையில் ஒற்றுமையின்மையால் தான் மக்களவைத் தேர்தலில் தோல்வியுற்றோம்

## அத்வானி உருக்கம்



(இந்தூர்) பாரதிய ஜனதா தலைவர்களுக்கு இடையில் ஒற்றுமை இல்லை, அடித்துக்கொள்கிறார்கள் என்ற தோற்றத்தை ஏற்படுத்தியதால் 2009 மக்களவை பொதுத் தேர்தலில் தோல்விஅடைந்தோம் என்று மூத்த தலைவர் அத்வானி தெரிவித்துள்ளார்.

இந்தூரில் நடைபெற்ற கட்சியின் தேசிய செயற்குழு கூட்டத்தில் ஆற்றிய நிறைவுரையில் இதை அவர் உருக்கமாக குறிப்பிட்டார்.பாரதிய ஜனதா கட்சியில் ஒற்றுமை இல்லை, தலைவர்கள் சண்டை போடுகிறார்கள், இவர்களைத் தேர்ந்தெடுத்தால் நல்ல நிர்வாகத்தைத் தரமாட்டார்கள் என்று மக்கள் நம்மைப் பற்றி நினைத்துவிட்டார்கள். நம்முடைய தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட பூசல் பகிரங்கமாக வெளிப்பட்டதால் நம்முடைய ஆதரவாளர்கள் மட்டும் இன்றி கட்சித் தொண்டர்களும் மனம் சோர்ந்தார்கள். அதன் விளைவாகவே நாம் மக்களவை பொதுத் தேர்தலில் தொடர்ந்து முறையாகத் தோற்றோம்.

மற்ற எல்லா அம்சங்களையும் விட நம்மிடையே ஒற்றுமை இல்லை என்று மற்றவர்கள் நினைத்ததாலேயே நமக்குத் தோல்வி ஏற்பட்டதாக நான் கருதுகிறேன். நம்முடைய கட்சி பிற அரசியல் கட்சிகளை விட வித்தியாச மான கட்சி என்பதை நிலைநாட்ட நம்மிடையே ஒற்றுமையும் ஒழுக்கமான நடத்தையும் அவசி யம்.

இப்போது தனியாகவும் கூட்டணியாகவும் நாம் ஆளும் மாநிலங்களில் ஏழைகளின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான திட்டங்களில் நாம் அதிகம் கவனம் செலுத்தவேண்டும். வறுமை ஒழிப்புக்கு முக்கியத்துவம் தரவேண்டும். சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் முன்னேற்றம் அடைய நாம் பாடுபட வேண்டும்.

நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் எளிமையாகவும் நேர்மையாகவும் செயல்பட்டு கட்சிக்கும் ஆட்சிக்கும் நல்ல பெயரை பெற்றுத்தரவேண்டும்.

காங்கிரஸ் கட்சித்தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் நடவடிக்கைகளால் அதிருப்தி அடைந்திருந்தாலும் நம்முடைய கட்சித்தலைவர்கள் ஒற்றுமைக் குறைவால் நம்மால் நிலையான அரசைத் தர முடியாதோ என்று மக்கள் சந்தேகப்பட்டார்கள். அதன் விளைவாகவே காங்கிரஸ் கூட்டணிக்கு வாக்களித்தார்கள்.

அப்படி நம்மைவிட்டுப் போனவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு என்றாலும் அதனால் நாம் ஆட்சியை இழந்தது என்னவோ உண்மை. இனி எதிர்காலத்தில் இப்படி நேரக்கூடாது என்றார். (6)

# ஜெயலலிதாவின் பகல் கனவு பலிக்காது ; தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி தொடரும்

## கருணாநிதி பேட்டி



(சென்னை) தி.மு.கவிடமிருந்து காங்கிரஸை பிரித்து விட்டு பின் அதனுடன் கூட்டணி ஏற்படுத்தலாம் என்ற ஜெயலலிதாவின் பகல்கனவு பலிக்காது என்று முதல மைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

முதல் அமைச்சர் கருணாநிதி ஒரு ஆங்கில நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது, தமிழ்நாட்டில் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி மிகவும் வலிமையாக உள்ளது. மதவாதத்துக்கும் தீய சக்திகளுக்கும் எதிராக உருவானதுதான் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி. இந்தக் கூட்டணியை உடைத்து விடலாம் என்று ஜெயலலிதா நினைக்கிறார்.

தி.மு.க.விடம் இருந்து காங்கிரஸை பிரித்துவிட்டு, பிறகு காங்கிரசுடன் கூட்டணி ஏற்படுத்தி விடலாம் என்று ஜெயலலிதா கனவு கண்டு கொண்டிருக்கிறார். அவரது பகல் கனவு ஒருபோதும் பலிக்கப் போவது இல்லை. அவர் பகல் கனவு காண்பதை நிறுத்தவேண்டும்.

தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி வலுவாக உள்ளது. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலிலும் கூட தி.மு.க. -காங்கிரஸ் கூட்டணி நீடிக்கும். அந்தத் தேர்தலில் தி.மு.க. -காங்கிரஸ் கூட்டணி மகத்தான வெற்றிகளைக் குவித்து சாதனை படைக்கும்.

சமீபகாலமாக அ.தி.மு.க.வில் உள்ள எம்.எல்.ஏக்கள்,கட்சியின் மூத்த நிர்வாகிகள், தொண்டர்கள், ஜெயலலிதாவின் செயல்பாடுகளால் கடும் அதிருப்தி அடைந்து, அவரிடம் இருந்து விலகி வருகிறார்கள். இதனால் விரக்தி அடைந்துள்ள ஜெயலலிதா, இதுபற்றி மக்கள் சிந்திக்கக் கூடாது என்பதற்காக திசை திருப்பும் நடவடிக்கையாக காங்கிரசுடன் கூட்டணி என்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்.

அ.தி.மு.க. சார்பில் நடத்தப்படும் போராட்டங்கள், உண்ணாவிரதங்கள் போன்றவையும் கூட மக்களின் கவனத்தை திசை திருப்பும் செயல்தான்.

காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி வெளிநாட்டைச் சேர்ந்தவர் என்று முன்பு ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டார். கூட்டங்களில் எல்லாம் சோனியா வெளிநாட்டுக்காரர் என்றார். இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு ஜெயலலிதா இப்போது என்ன சொல்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

யூரியா உர விலை உயர்வு பிரச்சினை காரணமாக தி.மு.க.காங்கிரஸ் உறவில் உரசல் ஏற்பட்டிருப்பதாக சொல்வதெல்லாம் பத்திரிகைகளின் யூகங்களாகும். இந்த உர பிரச்சினை பற்றி சரியாக சொல்ல வேண்டுமானால் இது தி.மு.க- காங்கிரஸ் உறவைப் பலப்படுத்தும் உண்மையான உரமாக உள்ளது. இவ்வாறு முதல் -அமைச்சர் கருணாநிதி கூறினார். (6)

# ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் புற்றுநோயை தீர்க்க முடியுமா ?

## சென்னையில் கருத்தரங்கு

(சென்னை) அடையார் ஐ.ஐ.டியில் உள்ள உயிரி தொழில்நுட்பம் மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் புற்றுநோய் உயிரி மற்றும் செல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு 3 நாட்கள் சென்னையில் நடை பெற்றது.

இக் கருத்தரங்கில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் மயில்வாகனன் நடராஜன் ஆரம்பித்து வைத்தார். கருத்தரங்கு குறித்து புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவன நிறுவனர் டாக்டர் சி.எஸ். மணி கூறியதாவது, இந்தியா முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் 10 இலட்சம் பேர் புதிதாக புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். ஆண்டுக்கு 5 1/2 இலட்சம் பேர் புற்றுநோயால் இறக்கின்றனர். 200 வகையான புற்றுநோய் உள்ளது. நோய் நம்மை தாக்கியுள்ளதை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் 90 சதவீதம் பேரை குணப்படுத்தலாம்.

ஆண்களுக்கு நுரையீரல், இரைப்பை வாய்ப் பகுதியிலும், பெண்களுக்கு மார்பகம், கர்ப்பப்பை பகுதியிலும் அதிகளவில் புற்றுநோய் பாதிப்பு வருகிறது. இதனால் 40 வயதைத் தாண்டியவர்கள் மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது அவசியம் என்றார். (6)




# தெலுங்கானா போராட்டம் தீவிரம்; 2 மாணவர்கள் தற்கொலை

## ஐதராபாத்தில் பதற்றம்



(நகரி)

ஆந்திராவில் இருந்து தெலுங்கானா பகுதிகளைப் பிரித்து தனி மாநிலம் உருவாக்க வேண்டும் என்று போராட்டம் நடைபெற்று வருகிறது.

தெலுங்கானா மாநிலம் பற்றி ஆய்வு நடத்த மத்திய அரசு நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் குழு அமைத்தது. இந்தக் குழுவின் காலக்கெடு டிசம்பர் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு நாட்கள் காலதாமதம் ஏற்படுத்துவதற்கு கண்டனம் தெரிவித்து மாணவர்கள் மீண்டும் போராட்டத்தில் குதித்தனர்.

நேற்று முன்தினம் ஆந்திர சட்ட சபையை முற்றுகையிடும் போராட்டம் நடந்தது. இதற்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் உஸ்மா னியா பல்கலைக் கழகத்தில் இருந்து ஊர்வல மாகப் புறப்பட்டனர். அவர்களைப் பொலிஸார் பல வழிகளில் தடுத்து நிறுத்தினர்.

மாணவர்கள் போராட்டம் சட்ட விரோதம் என அரசு அறிவித்து ஐதராபாத்தில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஐதராபாத் மற்றும் செகந்திராபாத் செல்லும் அனைத்து மின்சார ரயில்களும் இரத்துச் செய்யப்பட்டன. வழி நெடுகிலும் பாலங்களிலும் வீதிகளிலும் பொலிசார் குவிக்கப்பட்டனர். 100 சோதனைச் சாவடிகள் அமைக்கப் பட்டன.

9 ஆயிரம் மாநகர பொலிசாருடன் 20 ஆயிரம் துணை இராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். சட்ட சபைக்கு செல்லும் அனைத்து வீதிகளும் சீல் வைக்கப்பட்டன. சட்ட சபையைச் சுற்றிலும் 3 கி.மீ. சுற்ற ளவுக்கு வீதிகள் வெறிச் சோடிக் கிடந் தன.

வித்யாநகர் அருகே பேரணி வந்தபோது பொலிசாருக்கும் மாண வர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. ஊர்வலத்தைத் தடுத்த பொலிஸ் காரர்கள் மீது மாணவர்கள் கல்வீசி தாக்கினார்கள். மாணவர்கள் நடுவீதியில் அமர்ந்தபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது நோபல் கல்லூரியைச் சேர்ந்த 2ஆம் ஆண்டு மாணவர் ஜாடையா திடீரென உடலில் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தீ வைத்தார். உடனே பொலிசார் பாய்ந்து சென்று தீயை அணைத்தனர். அதற்குள் தீ உடல் முழுவதும் பற்றி எரிந்தது. தீயை அணைத்து அம்புலன்ஸ் மூலம் தனியார் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரது நிலை கவலைக்கிடமாக இருந்தது.

மாணவர் தீக்குளிப்பால் மற்ற மாணவர்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. அவர்கள் ஆவேசத்துடன் சட்ட சபையை நோக்கிப் புறப்பட்டனர். பொலிஸார் அவர்களைத் தடுத்த போது மோதல் ஏற்பட்டது. பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி கூட்டத்தைக் கலைக்க முயன்றனர். பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்ட 300 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். இரவு வரை போராட்டம் நீடித்தது.

இதற்கிடையே தீக்குளித்த மாணவர் ஜாடையா நேற்று அதிகாலை பரிதாபமாக இறந்தார். இதனால் ஐதராபாத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. மாணவர்கள் பஸ்ஸை தீ வைத்துக் கொளுத்தியதால் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இதற்கிடையே தெலுங்கானா போராட்டத்தில் பங்கேற்ற நல்கொண்டா மாவட்டம் கிராந்தி நகரைச் சேர்ந்த பொறியியல் கல்லூரி மாணவர் ஸ்ரீனிவாஸ் பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்துகொண்டார்.

முன்னதாக போராட்டத்தில் பங்கேற்ற இவர் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டார். பின்னர் அவர் பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

அவர் எழுதிய கடிதத்தில் இனி தெலுங்கானா கிடைப்பது போல தெரியவில்லை. தெலுங்கானாவை பிரித்தால் 2 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். படித்து விட்டு வேலையில்லலாத பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் இருந்தேன். டிசம்பருக்குள் தெலுங்கானா கிடைக்கும் என்று நம்பினேன்.

அதற்குள் ஆந்திரா ராயலசீமா பகுதியைச் சேர்ந்தவர்கள் சூழ்ச்சி செய்து தடை செய்துவிட்டார்கள். எனவே நான் தற்கொலை செய்கிறேன். எனது தற்கொலைக்கு பிறகாவது தெலுங்கானா கிடைக்கட்டும் என்று கூறியுள்ளார். (6)





தென்மராட்சி கிழக்கு அரிமாக் கழகத்திற்கு வருகை தந்த ஆளுநர் லயன் லக்ஸ்மன் விஜயசிங்கி பாடசாலை மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் அருகில் கழகத்தலைவர், செயலாளர் ஆகியோர் நிற்பதையும் கொடிகாமம் மகளிர் அமைப்புக்கு மரக்கன்றுகள் வழங்கப்படுவதையும் அருகில் உப ஆளுநர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# இம்முறை அமைச்சரவை சிறிதாக்கப்படுவதுடன் இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்று அரசியலமைப்பை மாற்றுவதுடன் வடக்கு, கிழக்கு ,மலையகம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் பாரிய அபிவிருத்தியை முன்னெடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இம்முறை அமைச்சரவையை சிறிதாக்கும் அதேவேளை இளைஞர்களுக்கு முன்னுரிமையளிப்பதும் தமது எதிர்பார்ப்பாகுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் இந்நாட்டில் அரசியல் செய்ய எவருக்கும் உரிமையுண்டு. தனிப்பட்டவர்களைப் பாதிப்படையச் செய்ய நாம் தயாரில்லை. அவ்வாறு அரசியல் நடத்தவும் முடியாது. எவரும் அரசியல் நடத்தும் சுதந்திரம் இந்நாட்டில் உள்ளது என்பதை மக்கள் அறிவர் எனவும் அவர் தெரிவித்தார்.

லங்கா சுதந்திரக் கட்சியின் பதுளை மாவட்ட விசேட மாநாடு நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பண்டாரவளை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. பாராளுமன்ற சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார, அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, டிலான் பெரேரா, பிரதியமைச்சர் வடிவேல் சுரே, ஊவா மாகாண ஆளுநர் நந்தாமெத்தியூ, மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் உட்பட மாகாண அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது,

முன்னாள் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவின் புதல்வர் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றார். இத்தகைய புதிய இளைஞர்களை வரவேற்று ஆதரவளிப்பது சிறந்தது. புதியவர்களுக்கு கௌரவமளிப்பதும் வரவேற்பதும் வாழ்த்துவதும் இலங்கையில் மட்டுமன்றி முழு ஆசியாவிலும் உள்ள சிறந்த பழக்கவழக்கமாகும்.

மலையக மக்கள் வெள்ளையர்களின் ஏகாதிபத்திய போராட்டத்திற்கு முகம் கொடுத்தவர்கள். அவர்களின் தாக்குதல்களில் பலியானவர்கள். அத்தகையவர்களைக்கொன்று குவிக்கும் அளவிற்கு வெள்ளை ஏகாதிபத்தியம் கொடூரமானதாக திகழ்ந்தது.

அந்த வகையில் ஊவா மக்கள் உறுதியானவர்கள். டபிள்யூ ஜே.எம்.லொக்குப்பண்டார போன்றவர்கள் தாம் பதவி வகித்த கட்சிக்காக நேர்மையாக உழைத்தவர்கள். ஒரு பாராளுமன்ற சபாநாயகரைக்கூட எம்மால் நியமிக்க முடியாத நிலையில் சபாநாயகராக நியமனம் பெற்றவராவர்.

இம் முறை இளையோர் பலர் எம்முடன் உள்ளனர். கடந்த முறை மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாம் பெற 19ஆசனங்கள் நமக்குக்குறைவாக இருந்தன. இம்முறை அதனை நாம் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாம் பெற்றுக்கொள்வது மிக உறுதி. பல்வேறு கருத்துக்கள், வதந்திகள், சேறு பூசுதல் நடவடிக்கைகளுக்கு எமது மக்கள் துணைபோகின்றவர்கள் அல்ல. அதற்கு செவிமடுப்பவர்களும் அல்ல. அவர்கள் எம்மை வெற்றிபெறச் செய்வது உறுதி. எமது பக்கம் விரல் நீட்டியவர்கள் தற்போது தாமே திண்டாடும் நிலைக்குத் தள்ளப்படுவதை மக்கள் அறிவர்.

நகர்ப்புறங்களில் அபிவிருத்தியால் கட்டியெழுப்பும் திட்டம் ஒன்றை முதல் கட்டமாக கொழும்பில் ஆரம்பித்து வைத்துள்ளோம். நகமுபுரவர எனும் இக்கருத்திட்டத்தினூடாக சகல நகரங்களும் எதிர்காலத்தில் புனரமைக்கப்படும்.

இக் காலத்தில் நாம் பல்வேறு அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்து வருகிறோம். அவற்றில் இளைஞர்களுக்கு கூடுதல் வாய்ப்பு வழங்குவது அவசியம் . இம்முறை விசாலமான அமைச்சரவை ஒன்றை ஏற்படுத்துவது எமது நோக்கம் அல்ல. எனினும் இளைஞர்களுக்கு முன்னுரிமையளிப்பதே எமது நோக்கமாகும். அவர்களின் பலத்தை நாம் மட்டுமன்றி நாட்டு மக்களும் கண்டுணர்ந்துள்ளார்கள்.

நாம் நாடு முழுவதும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துள்ளோம். அதற்கு துடிப்புடன் செயலாற்றக் கூடியவர்களின் சேவை மிகவும் அவசியமாகிறது. நாம் முன்னரை விட பெருமளவு ஆசனங்களைப் பெற்றுப் பலமடைவது உறுதி.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் புதிதாக இணைந்து கொண்டுள்ள ஐ.தே.க. யினரையும் அத்துடன் சகல இன மக்களையும் இணைத்துக்கொண்டு செயலாற்ற வேண்டும். நீதி, நேர்மையான தேர்தலொன்றுக்காக நாம் உழைப்போம்.

வன்முறையில் ஈடுபட வேண்டியதில்லை. இந்நாட்டில் அரசியல் நடத்தக் கூடிய உரிமை சகலருக்குமுண்டு.பலரும் பலவாறு தூற்றுகின்றனர். சுதந்திரமில்லையென்று கூச்சலிடுகின்றனர். மக்கள் உண்மை நிலையை அறிவர். அரசியல் செய்வதற்கு மற்றவருக்கும் இடமளித்து உங்கள் அரசியலை நீங்கள் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

தனிப்பட்ட எவரையும் நாம் தாக்கப் போவதில்லை.அவ்வாறு அரசியல் நடத்தவும் முடியாது அதனால்தான் அரசியல் நடத்தும் உரிமையை அனைவருக்கும் உரிய தாக்கியுள்ளோம். இளைஞர்களை நாம் வாழ்த்துவதுடன் நேர்மையாக அரசியல் நடத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (6-4)

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

# தளபாட ஏல விற்பனை

**பயன்படுத்திய தளபாடங்களின் ஏல விற்பனை 25.02.2010 வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு இலங்கை வங்கி , ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அதிமேற்றரக் கிளையின் மேல் மாடியில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.**

**ஏலத்திற்குரிய தளபாடங்களின் விபரப் பட்டியலை எமது யாழ். மாவட்ட கிளைகளில் பார்வையிடலாம் .அத்துடன் அதிமேற்றரக் கிளையில் பொருட்களை நேரடியாக பார்வையிடவும் வசதியுண்டு.**

**ஏலத்தில் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணம் செலுத்துவதுடன் ஏலம் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பொருட்கள் அனைத்தையும் அப்புறப்படுத்த வேண்டும்.**

**உதவிப் பொது முகாமையாளர்
வட மாகாணம்.**

**ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**

(4483)

### முறிகண்டிப் பகுதியில்

# புதிய இடத்தில் வர்த்தக நிலையங்கள் அமைக்க ஏற்பாடு

(கொழும்பு)

ஏ-9 வீதியில் முறிகண்டிப் பிள்ளையார் கோவிலை அண்மித்த பகுதியில் அமைந்திருந்த வர்த்தக நிலையங்களை புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் வீதிக்கு அப்பால், கிழக்குப் பகுதியில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை புதுக்குடியிருப்புப் பிரதேசசபை மேற்கொண்டு வருவதாகச் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழைய இடத்தில் இருந்த கடைகள் அனைத்தும் போர் அனர்த்தங்களினால் அழிந்து போன நிலையில் புதிதாக அமைக்கப்படும். கடைத் தொகுதியை கோவில் வளாகத்துக்கு அப்பாலுள்ள பகுதியில் அமைப்பதன் மூலம் கோவில் சுற்றாடலைப் பாதுகாப்பாகவும் சுத்தமாகவும் வைத்திருக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய இடத்தில் கடைத் தொகுதியை அமைக்கும் போது ஏற்கனவே இந்தப் பகுதியில் நீண்டகாலமாக வர்த்தக நட வடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என இந்தப் பகுதி வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-4)

# சார்க் மாநாட்டிற்கான அழைப்பிதழ் கையளிப்பு

16 ஆவது சார்க் மாநாட்டிற்கான அழைப்பிதழை நேபாள வெளிவிவகார அமைச்சர் லியொன்போ உகென் ரெஷெரிங் அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

அதேவேளை பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பும் இலங்கைக்கான இத்தாலிய தூதுவர் பியோ மரியானியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் விஜயசிங்க ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (6-4)

### வன்னிப் பகுதியில்

# கைவிடப்பட்டிருந்த கால் நடைகளை பெற்றுக் கொள்வதில் உரிமையாளர்கள் சிரமம்

(கொழும்பு)

வன்னியில் நடந்த போரின் போது உரிமையாளர்களால் கைவிடப்பட்டிருந்த ஆயிரக் கணக்கான கால்நடைகள் இப்போது அந்தப் பிரதேசங்களில் காணப்படுகின்றன.

ஆனால் இந்தக் கால்நடைகளை மீளப் பிடிப்பதற்கும் அவற்றை உரிய முறையில் உரிமையாளர்கள் பெற்றுக்கொள்வதற்கும் முடியாத நிலை உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கிளிநொச்சி, ஆனையிறவு, புதுக்குடியிருப்பு, அக்கராயன், மல்லாவி, முழங்காவில், பூநகரி, ஒட்டுசுட்டான், விசுவமடு, வட்டக்கச்சி ஆகிய இடங்களில் பெருந்தொகை யான கால் நடைகள் கட்டாக்காலிகளாக நிற் கின்றன.

இந்தக் கால்நடைகளைப் பிடிப்ப தற்கு அனுமதி பெறுவதிலும் அவற்றை தகுந்த ஆதா ரங்களைக் காட்டி மீண்டும் பெற்றுக் கொள்வதற்கும் இன்னும் பொருத்தமான ஏற்பாடுகள் பிரதேச செயலர் பிரிவுகளால் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் கால்நடை உரிமையாளர்கள் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இதேவேளை மீள்குடியேற்றத்தின் மூலம் அனைத்து மக்களும் முழுமையாக சொந்த இடங்களுக்குத் திரும்பும் போது தான் கால்நடைகளை உரிமையாளர்கள் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும். இப்போது அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தால் முறைகேடுகள் இடம்பெறுவதற்கே வழி வகுக்கும் என பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மீளக்குடியமர்ந்தவர்கள் மீளக் குடியமராதவர்களின் கால்நடைகளையும் உரிமை கோரக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் எனவும் இதனால் தொடர்ந்து பிரச்சினைகளே ஏற்படும் என்பதால் உடனடியாக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சிரமமாக உள்ளது என இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (6-4)

### புதிய அமைச்சரவையில்

# அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுப் பதவிகள் நீக்கம்

## ஜனாதிபதியின் செயலாளர் வீரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்பு பதவிக்கு வரும் புதிய அரசாங்கத்தின் கீழ் அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் மாத்திரமே நியமிக்கப்படுவர் என்றும் இதுவரை காலமும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாகப் பதவி வகித்து வந்த அமைச்சர்களது நியமனங்கள் யாவும் புதிய அரசாங்கத்தின் கீழ் இரத்துச் செய்யப்படுமென்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க சிங்கள நாளிதழொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தற்பொழுது அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாக 39 பேர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த அமைச்சர்களின் கீழ் இயங்கும் அமைச்சர்கள் யாவும் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்பு ஆட்சி அமைக்கும்போது இரத்துச் செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசு அமைச்சுக்களை 35ஆக மட்டுப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் இதன் பிரகாரம் பிரதியமைச்சுக்களும் 35 ஆக மட்டுப்படுத்தப்பட்டு ஏனைய மேலதிக அமைச்சர்களின் பொறுப்புக்கள் யாவும் இந்த அமைச்சுக்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் ஜனாதிபதி செயலாளர் கூறியுள்ளார்.

தற்போது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் 51உம் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுக்கள் 39உம் பிரதியமைச்சர்களின் கீழான அமைச்சுக்கள் 19மாக மொத்தம் 109 அமைச்சுக்கள் இருப்பதாகவும் புதிய தீர்மானத்தின் கீழ் அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் 70 ஆக மட்டுப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி செயலாளர் மேலும் தெரிவித்தார்.

(6-4)

# சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோ காட்சிகள் உண்மையானவை

## அமெ. நிறுவனம்

(கொழும்பு)

சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய தமிழ் இளைஞர்கள் இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்படும் காட்சிகளின் நம்பகத்தன்மை குறித்து அமெரிக்க நிறுவனம் ஒன்று ஆய்வு நடத்தியதாக அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் படுகொலைகளை ஆராயும் சிறப்புப் பிரதிநிதி பிலிப் அலஸ்ரனின் வேண்டுகோளின் பேரில் குறிப்பிட்ட காணொளிக் காட்சிகளின் நம்பகத்தன்மையை தாங்கள் பரிசோதித்ததாக கொக்னி ரெக் என்ற அமெரிக்க நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட காணொளிகள் உண்மையானவை என்பதை தமது நிறுவனம் உறுதிப்படுத்தியதாகவும் அதன் பின்னரே அவை மேலதிக விசாரணைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

(6-4)

### பாதுகாப்பு நீக்கப்பட்டமை தொடர்பில்

# ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவுக்குக் கடிதம்



(கொழும்பு)

தனக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு கடந்த 16ஆம் திகதி முதல் நீக்கப்பட்டது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளைக்கு இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது;

எனக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை கடந்த 16ஆம் திகதி முதல் பொலிஸ் மா அதிபர் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். இதனால் எனது பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பிலான நாடாளுமன்ற உறுப்பினர் அமைப்பின் ஆரம்ப கால செயலாளராக நான் இயங்கினேன். எனினும் எனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அறிகிறேன். மனித உரிமைகளைப் பாதுகாப்பவர் என்ற வகையில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பீர்களேயானால் நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6-4)

# கிளிநொச்சி நகரில் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கிளிநொச்சி நகரில் வர்த்தக நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. போர் முடிந்த பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்குடியேற்றப் பணிகள் ஏ-9 வீதிக்கு மேற்குக் பக்கத்திலேயே நடந்து வருகின்றன.

எனினும் நகரில் கடைகளைத் திறப்பதற்கும் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் படையினரின் அனுமதி கிடைப்பது இது வரையில் தாமதமாகியே வந்தது.

இந்த நிலையில் இந்த வாரமே மீண்டும் கடைகளைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி கிடைத்திருக்கின்ற போதும் தமது கடைகள் முற்றாக அழிந்து போயுள்ளதால் உடனடியாக தம்மால் எதனையும் செய்ய முடியவில்லை என்று பல வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேவேளை இந்த அழிவுகள் பாதிப்புகளுக்கான நட்ட ஈட்டைத் தருவதற்கான ஏற்பாடுகள் கூட ஆரம்பிக்கப்படவில்லை என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி நகரில் 90 வீதமான கடைத் தொகுதிகள் இடித்தழிக்கப்பட்டு விட்டன என்பது குறிப்பிடத்தக்கது.(6)

# கிரிக்கெட், அரசியல் இரண்டிலும் ஈடுபடுவேன்

## சனத் ஜெயசூரிய

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரிய தான் தொடர்ந்து சர்வதேசப் போட்டிகளிலும் இந்தியன் பிரிமியர் லீக் போட்டிகளிலும் பங்கேற்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தான் டெஸ்ட் போட்டிகளில் ஓய்வு பெற்றுவிட்டதால் கிரிக்கெட்டுக்கும் அரசியலுக்கும் இடையே நேரத்தை பகிர்ந்து கொள்வது பிரச்சினையாக இருக்காது என்றும் அவர் கூறினார்.

மேலும் தான் பிறந்து வளர்ந்த மாத்தறை மாவட்டத்திலிருந்துதான் போட்டியிடப் போவதாகவும் அந்தப் பகுதியின் வளர்ச்சிக்காகப் பாடுபடப்போவதாகவும் அவர் கூறினார்.

ஒரு நாள் போட்டிகளில் 13 ஆயிரம் ரன்களையும் 300இற்கும் அதிகமான விக்கெட்டுக்களையும் வீழ்த்திய ஒரே வீரர் என்ற சாதனை உட்பட பல சாதனைகளை அவர் புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# ஐ.தே.க. பிரதி செயலாளரிடம் குற்றத்தடுப்பு பொலிசார் விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி செயலாளர் லக்ஷ்மன் செனவிரட்ண குற்றத் தடுப்பு பொலிசாரால் விசாரணை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த போது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்களைப் பெறும் நோக்கில் இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மேலும் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து அண்மையில் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடமும் குற்றத் தடுப்பு பொலிசார் விசாரணை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6-4)

# பாம் எண்ணெய் இறக்குமதி வரி 35 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது

பாம் எண்ணெய் இறக்குமதி வரி 35 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் பாம் எண்ணெய் ஒரு கிலோவுக்கு இதுவரை காலமும் அறவிடப்பட்டு வந்த 60 ரூபா இறக்குமதி வரி கடந்த வெள்ளிக்கிழமை முதல் 35 ரூபா வரை குறைக்கப்பட்டுள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பாம் எண்ணெய் இறக்குமதி வரி 35 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதால் பாம் எண்ணெய்யின் விலையும் குறைவடையும் என்றும் இதேவேளை பாம் எண்ணெயின் விலை குறைவடைவதால் தேங்காய் எண்ணெய் மற்றும் தேங்காயின் விலையில் மாற்றம் ஏற்படலாம் என்றும் தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கீர்த்தி ஸ்ரீவீரசிங்க தெரிவித்துள்ளார்.

தேங்காய் விலையேற்றத்தின் காரணமாக நுகர்வோர் முகம் கொடுத்து வந்த பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்த பின்னரே இந்த பாம் எண்ணெய் இறக்குமதி வரியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (6-4)

# புத்தளம் மாவட்டத்தில் தேசியப் பட்டியல் மூலம் சிறுபான்மையினத்தவரை நியமிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவரை தேசியப் பட்டியல் மூலம் நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சியினரிடமும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடமும் விடுக்கப்பட்டுள்ளன.

இக்கோரிக்கையை புத்தளம் மாவட்ட பொதுநல சபைகள், கலை இலக்கிய ஒன்றியங்கள் என்பன ஒன்றிணைந்து விடுத்துள்ளன.

நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் புத்தளம் மாவட்டத்தில் இருந்து எந்த ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த எவராவது தெரிவு செய்யப்படவில்லை. இதுவே யதார்த்தமும் சரித்திரமும் கூட.

புத்தளம் மாவட்டத்தில் கடந்த இருபது வருடங்களாக இந்த நிலைமையே ஏற்பட்டு வருகின்றது. நடைபெற்ற சகல தேர்தல்களிலும் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் பல்வேறு கட்சிகளில் புத்தளம் மாவட்ட தேர்தலில் போட்டியிட்டவர்கள்.

இந்த சிறுபான்மை மக்களின் வாக்குகள் இம்மாவட்ட தென்பகுதியைச் சென்றடைகின்றன. ஆனால் இங்கிருந்து பிரதிநிதிகள் எவரும் சிறுபான்மை சமூகத்துக்குக் கிடைப்பதில்லை என்ற அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் தேர்தல் காலத்தில் பெரும்பான்மை அரசியல் அதிகாரம் கொண்டவர்கள் சிறுபான்மை மக்கள் வாழும் பகுதிகளில் அபிவிருத்தி என்ற போர்வையில் பல திட்டங்களை ஏற்படுத்துவார்கள். வெற்றியடைந்தவுடன் சென்று விடுவார்கள்.

இந்த நிலையே இம்மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எனவே புத்தளம் மாவட்ட சிறுபான்மை சமூகத்தின் நன்மை கருதி தேசிய பட்டியல் மூலம் ஒரு உறுப்பினரையாவது நியமிக்க காத்திரமான நடவடிக்கை எடுக்கும்படி அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

# ஈரானுக்கு ஏவுகணை ரஷ்யா வழங்கவுள்ளது

ஈரான் நாட்டுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அந்த நாட்டுக்கு ரஷ்யா எஸ்-300 ரக ஏவுகணைகளை வழங்கவுள்ளது. இந்தத் தகவலை ரஷ்யாவின் வெளியுறவுத்துணை அமைச்சர் செர்ஜி ரியாபாக்கோவ் தெரிவித்தார். இந்த ரக ஏவுகணைகள் ஈரான் வானவெளிக்குள் வரும் எதிரி நாட்டு ஏவுகணைகளையும் விமானங்களையும் சுட்டு வீழ்த்தும்.

ஏவுகணைகளை ஈரானுக்கு வழங்கும் இந்த ஒப்பந்தத்தை இரத்து செய்யும்படி அமெரிக்காவும் இஸ்ரேலும் ரஷ்யாவை அடிக்கடி கேட்டுக்கொண்டு வருகின்றன. இதற்கு ரஷ்யா செவிசாய்க்க மறுத்துவிட்டது.

இந்த ஏவுகணைகளை வழங்கும் ஒப்பந்தத்தை செயற்படுத்துவோம் என்று அவர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்தை அரசியலாக்குவதைக் கைவிடுமாறும் அவர் அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டார். (6-4)

## டார்பூர் தீவிரவாதிகளுக்கும் சூடான் அரசுக்குமிடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்து

டார்பூரின் முக்கிய தீவிரவாதி அமைப்பு ஒன்று சூடான் அரசாங்கத்துடன் சில நிபந்தனைகளின் அடிப்படையில் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் உடன்படிக்கையில் 100 தீவிரவாதிகளின் மரண தண்டனை நீக்கம், சுதந்திர நடமாட்டம் உள்ளிட்ட கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

எவ்வாறெனினும் மற்றுமொரு முக்கிய தீவிரவாதப் பிரிவு சமாதான முனைப்புக்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த ஏழு வருடங்களாக சூடானிய அரசாங்கப் படையினருக்கும் டார்பூர் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் யுத்தம் இடம் பெற்று வருகின்றது.

இந்த மோசமான யுத்தம் காரணமாக சுமார் 3 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளதுடன் 2.5 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டபோதிலும் இதனை நிரந்தர சமாதானமாக கருத முடியாது என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (6-4)

## முப்பரிமாண படங்களால் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படும்

### ஆய்வில் தகவல்

(நியூயோர்க்)

முப்பரிமாண (3டி) தொழில்நுட்பத்தில் எடுக்கப்படும் திரைப்படங்களைப் பார்ப்பதால் கண்களின் இயக்கம் குழப்பமடைந்து தலைவலி ஏற்படுவதற்கு வழிவகுக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தமிழில் முதன் முதலாக மைடியர் குட்டி சாத்தான் என்ற படம் 3 டி படமாக வெளிவந்தது. குழந்தைகள் இந்தப் படத்தை அதிகம் விரும்பிப் பார்த்தனர். இதைத் தொடர்ந்து சில படங்கள் வெளிவந்தன. சமீபத்தில் அவதார் என்ற 3 டி படம் பெரும் வசூலை ஈட்டி தந்துள்ளது. முப்பரிமாண படங்களுக்கு மவுசு கூடியுள்ளதால் விரைவில் 3 டி தொலைக்காட்சி அலைவரிசைகள் அறிமுகமாகவுள்ளன. சோனி, சூப்பர் மேக்ஸ், ஸ்டார் உள்ளிட்ட தொலைக்காட்சிஅலைவரிசைகள் விரைவில் 3 டி அலைவரிசையில் அதற்கேற்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

வழக்கமாக முன்னும் பின்னும் மெதுவாக நகரக்கூடிய கண்ணில் உள்ள லென்ஸ் தெளிவான உருவத்தை காட்டவல்லது. 3டியில் அதிரடி காட்சிகள் கண்களின் அசை வில் குழப்பத்தை ஏற்படுத்திவிடும். முழுநீள 3டி படத்தைப் பார்க்கும் போது கண்களுக்கு சோர்வு ஏற்பட்டு தலைவலியும் தெளிவற்ற பார்வையும் உண்டாகும் என கண் தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (6-4)

## விமான நிலைய ஸ்கேனர் கருவி இஸ்லாம் கொள்கைக்கு எதிரானது

### அமெ. முஸ்லிம் அமைப்புக்கள் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

விமான நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள முழு உடலை பரிசோதிக்கும் ஸ்கேனர் கருவி இஸ்லாமுக்கு எதிரானது என அமெரிக்க முஸ்லிம் அமைப்பு தெரிவித்துள்ளது.


கடந்த டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி கிறிஸ்துமஸ் அன்று நெதர்லாந்து நாட்டின் ஆம்ஸ்டர்டாம் நகரிலிருந்து அமெரிக்காவின் டெட்ராய்ட் நகரத்துக்கு வந்த விமானத்தை நைஜீரிய வாலிபர் ஒருவர் தன் உள்ளாடையில் மறைத்து வைத்திருந்த வெடி மருந்தில் ஊசி மூலம் இராசயனத்தைச் செலுத்தியபோது புகை வந்தது. இவர் இந்த விமானத்தைத் தகர்க்க முயன்றது கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தால் உஷாரடைந்த அமெரிக்க நிர்வாகம் அனைத்து விமான நிலையங்களிலும் உடல் முழுக்க சோதனையிடும் ஸ்கேனர் கருவியை வைக்க ஏற்பாடு செய்தது.

இதன் மூலம் பயணிகள் தங்கள் உடலில் மறைத்து வைத்திருக்கும் ஆயுதத்தையோ போதைப் பொருளையோ எளிதில் கண்டு பிடித்துவிடலாம்.

இந்த ஸ்கேனர் கருவி இஸ்லாம் கொள்கைக்கு எதிரானது என அமெரிக்க இஸ்லாமிய அமைப்பு தெரிவித்துள்ளது. இதற்கு அமெரிக்க முஸ்லிம்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். (6-4)




## மொராக்கோவில் பள்ளிவாசல் ஸ்தூபி இடிந்து விழுந்ததில் 36 பேர் பலி



(ரேபாட்)

மொராக்கோ நாட்டில் மசூதி ஒன்றின் ஸ்தூபி இடிந்து விழுந்ததில் 36 பேர் பலியாகினர். 71 பேர் காயமடைந்தனர்.

ஆபிரிக்கா நாடுகளில் ஒன்றான மொராக்கோவின் மெக்னஸ் நகரில் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த மசூதி ஒன்று உள்ளது. இந்த மசூதியில் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகை நடந்து கொண்டிருந்தபோது அதன் ஸ்தூபி திடீரென இடிந்து விழுந்தது. இதில் 36 பேர் உயிரிழந்தனர். 71 பேர் காயமடைந்தனர்.

இது குறித்து மொராக்கோ உள்துறை அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடும் மழையால் கட்டடம் பலவீனமடைந்ததே ஸ்தூபி இடிந்து விழக் காரணம் என்றார்.

மசூதி ஸ்தூபி இடிந்து விழும் போது கடந்த வெள்ளிக்கிழமை மாலை தொழுகைக்காக 300 பேர் வரை அங்கு திரண்டிருந்ததாக குறிப்பிடப்படுகிறது. (6-4)

## போர்த்துக்கல் தீவில் நிலச்சரிவில் சிக்கி 32 பேர் பலியாகியுள்ளனர்

(பன்சால்)

போர்த்துக்கல் நாட்டில் மாடய்ரா தீவு உள்ளது. இது தன்னாட்சி அதிகாரம் பெற்றது. 480 கி. மீற்றர் பரப்பளவு கொண்ட இத்தீவில் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வசிக்கின்றனர்.

இங்கு காற்றுடன் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளப் பெருக்கும் அதைத் தொடர்ந்து நிலச்சரிவும் ஏற்பட்டது.

இதனால் வீடுகள் கட்டிடங்கள் மண்ணுக்குள் புதைந்தன. வீதிகள் துண்டிக்கப்பட்டதுடன் மின்சாரமும் தடை செய்யப்பட்டது. கடுமையான மழை பெய்து வருவதால் ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

பலத்த காற்று மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக பன்சால் உள்ளிட்ட நகரங்கள் மற்றும் கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நிலச் சரிவில் 32 பேர் பலியாகியுள்ளனர்.

மீட்புப் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. (6-4)

## ஐ.நா. பாதுகாப்பு சபையில் உறுப்பினராக இந்தியாவுக்கு 53 நாடுகள் ஆதரவு

(நியூயோர்க்)

ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவை நிரந்தரமில்லாத உறுப்பினராக ஏற்றுக்கொள்வதற்கு 53 ஆசிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தரமில்லாத உறுப்பினராவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது.

ஐ.நா. பாதுகாப்பு சபை மொத்தம் 15 உறுப்பினர்களை உள்ளடக்கியது. இதில் 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன. மற்ற 10 நாடுகள் 2 ஆண்டுகள் பதவிக்காலத்தின் அடிப்படையில் நிரந்தரமில்லாத உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. பாதுகாப்புச் சபையில் நிரந்தரமில்லாத உறுப்பினர் பதவிக்கு ஆசியாவில் இந்தியாவும் கஜகஸ்தானும் போட்டியிட்டன. ஆனால் கஜகஸ்தான் சமீபத்தில் போட்டியில் இருந்து விலகிவிட்டது. இதனால் ஆசியாவில் இருந்து போட்டியிடும் ஒரே நாடாக இந்தியா உள்ளது.

மேலும் கஜகஸ்தான் போட்டியில் இருந்த போது ஐ. நா. பொதுச் சபையில் இந்தியாவுக்கு ஆதரவாக 122 வாக்குகள் இருந்தன. இந்நிலையில் 53 ஆசிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளதால் இந்தியாவுக்கு ஆதரவு மேலும் பெருகியுள்ளது என்று இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு சபையில் நிரந்தரமில்லாத உறுப்பினராக ஐ.நா. பொதுச் சபையில் உள்ள மொத்த வாக்குகளில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை (128 வாக்குகளை) பெறுதல் அவசியமானது. (6-4)

## மூழ்கிய கப்பலில் தவித்த 60 மாணவர்கள் 16 மணி நேர போராட்டத்தின் பின் மீட்பு



(ரியோடி ஜெனிரோர்)

கனடாவைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் 60 பேர் கொண்ட குழு வினர் உலகை சுற்றி வர ஒரு கப்பலில் புறப்பட்டனர்.

அவர்கள் பயணம் செய்த கப்பல் கடந்த வியாழக்கிழமை பிரேசில் நாட்டு கடலுக்கு வந்தது. அப்போது திடீரென தண்ணீரில் மூழ்கத் தொடங்கியது.

இது குறித்து பிரேசில் நாட்டு கடற்படைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனே அவர்கள் அந்த வழியாக வந்த சரக்கு கப்பலுக்குத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து அந்தக் கப்பல் மீட்பு பணிக்காக விரைந்து சென்றது.

கடற்படை கப்பலும் விரைந்தது. இதற்கிடையே கப்பல் கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கியபடியே இருந்தது. இதனால் அதில் பயணம் செய்த மாணவர்கள் பயத்தில் உறைந்து போயிருந்தனர்.

இந்த நிலையில் 16 மணி நேர போராட்டத்துக்குப் பின் மூழ்கிய கப்பலில் இருந்து 60 மாணவர்களும் மாலுமிகள் உள்ளிட்ட சிப்பந்திகளும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

பின்னர் அவர்கள் பாதுகாப்பாக பிரேசில் நாட்டில் உள்ள ரியோடி ஜெனிரோ நகருக்கு அழைத்து செல்லப்பட்டனர். (6)



யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் ஒன்றியத்தின் *விருட்சம்* சஞ்சிகை வெளியீட்டு விழாவில் வணிக மாணவர் ஒன்றியத் தலைவர் ஸ்ரீ. தவக்குமார் தலைமையுரையாற்றுவதையும், முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா, வணிகத்துறைத் தலைவர் க.க. அருள்வேல் ஆகியோர் உரையாற்றுவதையும், சஞ்சிகையின் முதற்பிரதியை பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ். சண்முகலிங்கன் வெளியிட்டு வைக்க நிக்கொட் பிரதித் திட்டப் பணிப்பாளர் என்.எஸ். ஆர். சிவரூபன் பெற்றுக் கொள்வதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# கிளிநொச்சி, முல்லைத்தீவில் நீதித்துறை செயற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி முதல் நீதித்துறை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டு முதல் இந்தப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நீதித்துறைச் செயற்பாடுகள் இடம்பெற்று வந்ததுடன் கடந்த வருடம் மே மாதத்தின் பின்னர் அவர்களின் நீதித்துறைச் செயற்பாடுகள் முடங்கின.

இந்த நிலையிலேயே இலங்கையின் நீதித்துறை செயற்பாடுகள் அங்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேலும் கிளிநொச்சியின் புதிய மாவட்ட நீதிபதியாக எஸ். சிவகுமார் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் கிளிநொச்சியின் நீதிமன்ற நடவடிக்கைகள் புதிய கட்டடத் தொகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# சு.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் அமைச்சுப் பதவிகளை இழக்கக்கூடும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பல சிரேஷ்ட உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை இழக்கக்கூடுமென இருதின சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் சேவை மூப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் செயற்பட்ட விதத்தை அடிப்படையாகக் கொண்டு பதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி அநேகமான சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை இழக்க நேரிடலாம் என அந்தப் பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் சில புதிய முகங்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# பளையில் 230 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர்

கிளிநொச்சி பளைப் பிரதேசத்தில் மீள்குடியேற்றப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 230 குடும்பங்களைச் சேர்ந்த 750 பேர் நேற்று முன்தினம் அந்தப் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

மேலும் நாளை செவ்வாய்க்கிழமை பரந்தன், கண்டாவளைப் பிரதேசத்தில் சுமார் 250 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாகவும் கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேசங்களில் மீள்குடியேற்றப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அடுத்த மாதம் அளவில் இடம்பெயர்ந்த அனைத்து மக்களையும் மீள் குடியேற்ற முடியும் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார். (6-4)

# நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரங்களுக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்படவுள்ளது

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்காகப் பெருந்தொகைப் பணம் செலவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பிரபல அரசியல் தலைவர்கள் நாடாளுமன்றப் பிரசாரப் பணிகளுக்காக பாரியளவு நிதியைச் செலவிட உத்தேசித்துள்ளதாக ரிவிர சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னர் ஒருபோதும் இல்லாத வகையில் இம்முறை அதிகளவு பணம் பிரசாரப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் பிரசாரப் பணிகளை முன்னெடுப்பதற்காக பிரபல விளம்பர நிறுவனங்களுக்குப் பல கோடி ரூபா பணத்தை வழங்க அரசியல் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மேல் மாகாணத்தில் போட்டியிடும் ஓர் அரசியல் தலைவர் தமது பிரசாரப் பணிகளுக்காக 250, கோடி ரூபாவினை ஒதுக்கியுள்ளதாகவும் மற்றுமொரு அரசியல் தலைவர் 200 கோடி ரூபாவினை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த தேர்தல்களின் போது வேட்பாளர்கள் பயன்படுத்தாத பல்வேறு பிரசார வழிமுறைகள் இம்முறைத் தேர்தலில் பின்பற்றப்படவுள்ளதாக ஆளும் கட்சி சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (6-4)

# உரும்பிராய் இந்துவில் இலவச வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

வெற்றிமணி பத்திரிகையின் மணி விழாவை முன்னிட்டு தரம் 5, தரம்10, தரம் 11 மாணவர்களிற்கு இலவச கணிதம் மற்றும் ஆங்கிலம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்கான வழிகட்டல் வகுப்புக்களை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பாடநெறிகளைப் பயிலவிரும்பும் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இதில் பங்கு கொள்ளவிரும்பும் மாணவர்கள் பாடசாலையில் கல்வி கற்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன் பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

வகுப்புக்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (6-13-14)

# மாணவர் நல மேம்பாட்டிற்கு உதவும் சாரணியம்

இன்று உலக சாரணர் தினம். சாரணர் இயக்கத்தை உருவாக்கிய பிதாமகர் றொபேட் ஸ்ரிவின்சன் சிமித் பேடன் பவல் பிரபுவின் பிறந்த தினமே உலக சாரணர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. 1815ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி பிறந்த பேடன் பவல் பிரபு தனது வாழ்க்கைக் காலத்தில் தான் வகித்த தொழிலின் அனுபவத்தினால் பல உண்மைகளையும் கண்டறிந்தார்.

போரின் மூலம் மனித உள்ளங்களை காயப்படுவதனையும் மனித மனங்கள் ஆற்றுப்படுத்தலின்றி அவதிப்படுவதனையும் அத்துடன் மனித இருப்பே கேள்விக்குறியாக இருப்பதனையும் உணர்ந்து கொண்டார்.

சாரணர் இயக்கமானது எல்லோரது இதயங்களையும் மதித்து ஒன்றிணைத்து செயற்படுநிலையில் உள்ள புது உலகை ஆக்க எத்தணித்து வருகின்றது.

சாரணிய இயக்கத்தின் சத்திய வாக்குறுதியும் அது கொண்டுள்ள பத்துவிதிகளும் தனிநபர்களின் சுயவழிகாட்டுதல்களுக்கு அடிப்படையாக அமைகின்றது.

இன்று நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் அவற்றின் தொலைநோக்குக்கு அமைவாக சாரணிய இயக்கமானது வளர்ச்சியடைந்து வருவதை அவதானிக்கலாம்.

பாடசாலை மாணவர்களது ஆளுமையின் சமநிலை விருத்திக்கு உதவும் செயற்பாடுகள் சாரணிய இலக்குகளில் காணப்படுவதுடன் சிறந்த கல்வியறிவுடைய இளைஞர்



## இன்று உலக சாரணர் தினம்

இதன் காரணமாக இளைஞர் சமுதாயத்தை நல்வழியில் நெறிப்படுத்துவதற்கும் அவர்களின் திறமைகளையும் வினை ஆற்றுகைகளையும் பயனுள்ள விதத்தில் மனித குலத்திற்கு பயன்படுத்த வேண்டுமெனவும் நோக்காகக் கொண்டு சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தார். அன்று இவரின் தலைமைத்துவத்தினால் நடாத்தப்பட்ட பாசறை நிகழ்வுகள் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது. அத்துடன் அவர்களது ஆதரவு சாரணிய இயக்க வளர்ச்சிக்கு உந்து சக்தியாகவும் அமைந்தது.

சமூகத்தை உருவாக்குவதனையும் அது ஊக்குவிக்கின்றது.

சாரணியத்தின் உள்ளார்ந்த உணர்வலையின் நீரோட்டத்தில் இணைந்து கொள்ளும் போது நிச்சயமாக நன்நிலையுடன் நன்றியுணர்வுள்ள சமுதாய உறவுகள் வளர்ந்து வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சாரணிய அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தமது தேசத்திற்கும் சமயத்திற்கும் உணர்வு ரீதியாக பணி செய்வதற்கு உறுதிப்பாடுடையவர்களாக காணப்படுவர்.

இன்று மாணவ சமுதாயத்திற்கு சாரணியத்துறையின் ஊடாக சிறந்த பண்புகளையும் நல்வழிகாட்டுதல்களையும் வழங்கப்பட வேண்டிய அவசியம் உணரப்பட்டு வருகின்றது.

சாரணிய வளர்ச்சிக்கு வலுச்சேர்க்கும் விடயங்களை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கும் அதன் வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள அதன் பலவீன பரபரப்புக்களையும் செம்மைப்படுத்தி உதவுவதற்கும் ஒற்றுமையாக உழைப்போம் என இந் நாளில் உறுதி கொள்வோம்.

**வை. சசிகுமார்**
கைதடி முத்துக்குமாரசுவாமி
மகா வித்தியாலயம்.

> தமிழீழக் கனவு கண்டு கொண்டிருந்த போது எனது கோவணமும் களவு போய் விட்டது. ~ இந்தியக் கவிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வாடகை வீட்டார் படும்பாடு பாரீர்

தமிழ் மக்கள் இயல்பில் சுயநலம் மிக்கவர்கள். இதன் காரணமாக அவர்களுடை முன்னேற்றம் தடைப்படுகின்றது.

இவ்வாறு கூறியவர் டாக்டர் மு.வரதராசனார். அவர் கூறியது ஈழத்தமிழர்கள் ஆகிய எமக்குச் சாலப் பொருந்தும்.

எங்களிடம் இயல்பாக இருந்த சுயநலமும் ஒற்றுமைப் படாத தன்மையும் எங்களின் எதிர்காலத்தை அடியோடு தரைமட்டமாக்கி விட்டது.

இப்போது வெற்று பூமியில் நின்று வெறு வெளியை உற்றுப்பார்க்கும் அளவிலேயே நாங்கள் இருக்கின்றோம்.

இந்த இருப்புக்குக் கூட ஏ-9 பாதை திறப்பு உபத்திரமாகி விட்டது.

தென்பகுதியில் இருந்து வரும் பல்லாயிரக் கணக்கான சிங்கள மக்களை நாட்கணக்கில் வீடுகளில் தங்கவைத்து ஆயிரக்கணக்கில் உழைக்கும் வியாபாரம் திமிறத் தொடங்கியுள்ளது.

இதனால் வாடகைக்கு இருந்தவர்களை மணித்தியாலக் கணக்கில் அவகாசம் கொடுத்து துரத்தும் படுபாதகம் எங்கள் யாழ்ப்பாண மண்ணில் நடந்தேறுகின்றது.

வருகின்ற சிங்கள மக்களிடம் இருந்து சில ஆயிரங்களை விழுங்குவதற்காக நீதி, நியாயம், இனப்பற்று என எல்லாவற்றையும் ஒரு கணப்பொழுதில் வெட்டி விழுத்திவிட்டு எங்கள் உறவுகளை நாங்களே துரத்திவிடும் பாதகம் உலகில் எங்கும் இருக்க முடியாதெனலாம்.

யுத்தம் நடந்த போது, எறிகணை வீழ்ந்து வெடித்து போது, இடம்பெயர்ந்த போதெல்லாம் தங்கள் வீட்டைப்பாதுகாத்துக் கொடுத்த வாடகை வீட்டுக்காரர்களுக்கு வீட்டு உரிமையாளர்கள் வழங்கும் சன்மானந்தான் இது.

வாடகைக்கு இவர்கள் இருந்திருக்காவிட்டால் வீடு இருந்த இடமும் தெரியாமல் போயிருக்கும் என்ற உண்மை, இயல்பு நிலையில் மறைந்து நிற்பது மானிடப்பண்பிற்கு அழகல்ல.

பணத்திற்காக எங்கள் உறவுகளை நடுத் தெருவில் விடுவதோ, எங்கள் மண்ணை விலை பேசுவதோ தமிழ் இனத்திற்குச் செய்யும் படு தீமையாகவே அமையும்.

# அஞ்சல் மூலம் வாக்களிக்க விண்ணப்பிப்போர் வேறு ஒருவரின் பெயரில் விண்ணப்பித்தல் குற்றமாகும்

## தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பம் செய்யும் ஒரு சில வாக்காளர்கள் வேறு ஒருவரின் பெயரில் விண்ணப்பப்பத்திரங்களை சமர்ப்பிப்பது குற்றச் செயலாகும். அக் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர் தனது தொழிலை இழக்க நேரிடும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸா நாயக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது ,

அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பம் செய்யும் ஒரு சில வாக்காளர் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள அவர்களது பெயருக்கு சமமான வேறு ஆட்களின் பெயருக்காக விண்ணப்பப்பத்திரங்களை சமர்ப்பித்துள்ள சந்தர்ப்பங்கள் தேர்தல்கள் திணைக்களத்திற்கு அறியக் கிடைத்துள்ளன.

இது தொடர்பாக குறிப்பிட்ட வசதிகளைக் கோரும் ஆட்களின் கவனம் கீழ்க்காணும் விடயங்களின் பால் ஈர்க்கப்படுகின்றன.

அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளைக் கோரும் ஆள் ஒருவர் வேறு ஒருவரின் பெயருக்காக அதற்கான விண்ணப்பப்பத்திரங்களை சமர்ப்பித்தல் , நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் குற்ற வழக்குகள் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் வழக்குத் தொடரக்கூடிய குற்றச் செயல் ஒன்றாகும்.

அதேபோன்று அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண் ணப்பிக்கின்ற ஒருவர் இவ்வாறு குற்றவாளியாகுவாராயின் அவரின் தொழிலும் இதன் காரணமாக இல்லாதொழிய இடமுண்டு.

தேருனர் இடாப்பில் உள்ள தனது பதிவு விபரங்களை விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடுவதற்கு முன்னர் அந்த விபரங்கள் தனக்குரியது தான் என விண்ணப்பதாரர்கள் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். தனது பெயர்,தனது குடும்ப ஏனைய அங்கத்தவர்களது பெயர்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ளதா என ஆராய்ந்து பார்த்து தேர்தல் இடாப்பின் படி தனது வீட்டை நிச்சயமாக அறிந்துகொள்ளுமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்துரைகள் வழங்கப்படுகின்றன.

தகைமையுள்ள ஒருவர் தனது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மூலமாக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு விபரங்களில் பிழையற்ற தன்மையின் கீழ் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால் விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவரால் குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சித்துப் பார்க்க முடியாது.

விண்ணப்பதாரி வேறு ஒருவரின் பெயரால் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக தகைமை பெறும் காரணத்தால் குறிப்பிட்ட மற்றைய நபருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லாது போகும்.

பெரும்பாலும் பாதுகாப்புப்பிரிவுகளைச் சேர்ந்த அலுவலர்கள் இவ்வாறு பிழையாக விண்ணப்பப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்தார்கள் என்பது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக பாதுகாப்புப்பிரிவுகளில் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

# இடைத்தங்கல் முகாம் மாணவர்களுக்கு கண்டி மனித அபிவிருத்தி ஸ்தாபனம் உதவி

(கொழும்பு)

வவுனியா செட்டிக்குளம் இடைத்தங்கல் முகாமிலிருந்து இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்துள்ள 133 மாணவர்களுக்குரிய இரண்டு கல்வியாண்டுகளுக்கான கட்டணத்தினைச் செலுத்துவதற்கு கண்டி மனித அபிவிருத்தித் ஸ்தாபனம் முன்வந்துள்ளதாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக கற்கைத்துறைகளின் தலைவர் கலாநிதி ஏ.எஸ். சந்திரபோஸ் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது ,

வவுனியா செட்டிகுளம் இடைத்தங்கல் முகாமிலுள்ள மாணவர்களின் நலன் கருதி இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான கற்கை நெறியைத் தொடர்வதற்கான விண்ணப்பங்களை நாம் இலவசமாக வழங்கினோம்.

இதற்கேற்ப 133 மாணவர்கள் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்திருந்தனர். இந்த நிலையில் இவர்களுக்கான இரண்டு வருடங்களுக்குரிய கட்டணத்தினை வழங்குவதற்கு கண்டி மனித அபிவிருத்தி ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

இதன்படி இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் நாளை 23ஆம் திகதி இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் வவுனியா அல்லது யாழ்ப்பாணம் ஆகிய பிராந்திய கற்கை நிலையங்களுக்குச் சென்று தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்தார். (6-4)

# 'தலதா மாளிகை மீது தாக்குவோம்' எச்சரிக்கையை அடுத்தே மாநாடு இரத்து

கண்டி தலதா மாளிகையின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என அரசாங்கத்திற்கு ஆதரவான பௌத்த பிக்குகள் பயமுறுத்தியதை அடுத்தே மகாநாயக்கர்கள் நடத்த விருந்த சம்மேளன மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் கைது நடவடிக்கையைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என வலியுறுத்தும் வகையில் இந்த மாநாடு நடத்தப்படவிருந்தது.

இந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி மல்வத்த விகாரைக்கு வந்த சுமார் 45 பேரைக் கொண்ட பௌத்த பிக்குகள் குழு, மாநாட்டை நிறுத்த வேண்டும் என மல்வத்த தேரரை வலியுறுத்தியதாக மாநாட்டின் ஏற்பாட்டாளர்களான மிஹிந்தலை ரஜமகா விகாரையில் வணக்கத்துக்குரிய வலவாஹே குனுவெள தர்மரெத்தினதேரர் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த மாநாடு ஜனநாயகத்தை நிலை நாட்டவே நடத்தப்படவுள்ளதாக மல்வத்த மகாநாயக்கர் தெரிவித்த போது, மாநாடு நிறுத்தப்படாவிட்டால் புத்தரின் புனிதந்தம் வைக்கப்பட்டுள்ள தலதா மாளிகையின் மீது நடத்தப்படும் இரண்டு அல்லது மூன்று குண்டு வீச்சு சம்பவங்களுக்கு மல்வத்த மகாநாயக்கரே பொறுப்பேற்க வேண்டும் என அரசாங்க ஆதரவு பிக்குகள் அச்சுறுத்தியதாக மாநாட்டின் ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்க ஆதரவு பௌத்த பிக்குக்குழுவின் ஒருவரான உடுவே தம்மாலோக தேரர் இது தொடர்பில் தெரிவித்த போது, தாம் தலதா மாளிகையின் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தபோவதாக எச்சரிக்க வில்லை என குறிப்பிட்டார்.

எனினும் மகாநாயகர்கள், அரசியல்வாதிகளின் வலைக்குள் சிக்கவேண்டாம் என மாத்திரமே தாம் வலியுறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-5)

# கற்கை நெறிகளுக்கான பதிவுகள்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான் சமூக விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறி /சமூக விஞ்ஞான கலைப்பட்டக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்து இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத இடம் பெயர்ந்த மாணவர்களுக்கான பதிவுகளை மற்றும் மீள் பதிவுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ் பிராந்திய நிலையத்திலும் வவுனியா கற்கை நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

மேலும் இக்கற்கை நெறிகளுக்கு நலன்புரி நிலையத்தில் இருந்து விண்ணப்பித்த மாணவர்களுக்கு கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் இரண்டு வருட காலத்திற்கு புலமைப் பரிசில் வழங்க இணைப்பாளர் அறிவித்துள்ளார். (6-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



என் மகனே! உனக்கு எனது சொற்களின் பேரில் ஏதாவது மரியாதை இருக்குமானால் முதலாவதாக உன்னுடைய அறையின் எல்லாக் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து விடு. இதுவே நான் உனக்குத் தரும் முதல் அறிவுரையாகும். கீழ் நோக்கிச் சென்றபடியும் துன்பத்தில் மூழ்கிய படியும் ஏராளமான ஏழை மக்கள் நீ வாழும் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நீ அவர்களை அணுகிச் சென்று உன்னுடைய ஆர்வத்தையும் உற்சாகத்தையும் செலுத்தி அவர்களுக்குத் தொண்டு செய். நோய்வாய்ப்பட்டவர்களுக்குத் தொண்டு செய். உன்னுடைய முழுக்கவனத்தையும் செலுத்தி அந்த நோயாளிகளுக்கு வேண்டிய பணி விடைகளைச் செய். பசியால் வாடுபவனுக்கு உணவு கொடு. அறியாமையில் உள்ளவனுக்கு உன்னால் முடிந்த அளவிற்குக் கல்வியறிவைப் புகட்டு. என் மகனே! நான் உனக்குச் சொல்கிறேன்-இந்த முறையில் உன்னுடைய சகோதரர்களாகிய மக்களுக்கு நீ தொண்டு செய்ய ஆரம்பிப்பாயானால் நிச்சயமாக உனக்கு அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

# இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஆளுமையை வலுப்படுத்தும் சீனா

சீனாவின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டு வருகின்றது. அதன் கடற்படை பாரிய வளர்ச்சியை கண்டுள்ளது. இந்த நிலையில் அதன் ஆளுமையை வலுப்படுத்த தளங்கள் தேவை. எனவே இலங்கை உட்பட பல நாடுகளில் அமைக்கப்படும் தளங்களை வளர்ந்து வரும் தனது நீர் மூழ்கிக்கப்பல்களின் தளமாக சீனா பயன்படுத்தலாம் என ஈயூநியூஸ் நெற்வேர்க் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.



இலங்கையின் அம்பாந்தோட்டை பகுதியில் சீனா துறைமுகத்தை நிர்மாணித்து வருகின்றது. அதேசமயம் சீனா ஏடன் வளை குடாவில் கடற்படை தளத்தை அமைக்கவுள்ளதாக சீனாவின் அட்மிரல் ஒருவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் மத்திய கிழக்கில் பதற்றத்தை தோற்றுவித்துள்ளது.

அதாவது எரிபொருட்களின் விநியோகப் பாதை தொடர்பில் மோதல்கள் உருவாகி வருகின்றன. உலகம் பொருளாதார தளம்பலை சந்தித்துள்ள போதும் ஆசியப் பிராந்தியத்தில் உள்ள இந்தியா, சீனா ஆகிய இரு பெரும் நாடுகளின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகின்றது .ஆனால் அவற்றின் பொருளா தாரம் மத்திய கிழக்கு நாடுகளின் எண் ணெய் வளத்திலும் அதன் விநியோகத்திலும் தங்கியுள்ளது.

இந்து சமுத்திர விநியோகப் பாதையின் முக்கியத்துவம் கருதி இந்தியா தனது கடற்படையை கட்டியமைத்து வருகின்றது. இந்தப் பாதை வழியாகவே சீனாவின் 85 விகித எண்ணெய் விநியோகமும் ஆபிரிக்காவில் இருந்து பெறப்படும் மூலப்பொருட்களின் விநியோகமும் மேற்கொள்ளப்படுகின்றன.

இது மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க கடல் பகுதியின் முக்கியத்துவங்களையும் அதிகரித்துள்ளது. சீனா தனது வழங்கல் பாதைகளை பாதுகாப்பதை முதன்மையாக கருதி வருகின்றது. அது பேர்சியன் வளை குடாவில் இருந்து தென்சீனா கடல்பகுதி வரையும் விரிவடைந்துள்ளது.

இந்த நடவடிக்கை இந்தியாவுக்கு பெரும் கவலைகளை தோற்றுவித்துள்ளது. அதுவும் சீனாவை போல ஒரே அளவான எரிபொருட்களினதும் மூலப்பொருட்களினதும் தேவைகளை கொண்டுள்ளது.

இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல்களுக்கான காரணம் இதுவே. இந்து சமுத்திர பிராந்தியம் வளைகுடா நாடுகளுக்கு முக்கியமானது. கிழக்கு பகுதி ஊடான வர்த்த கத்திற்கும் எரிசக்தி ஏற்றுமதிக்கும் அது முக்கியமானது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கடற்படையின் ஆளுமைகளை கொண்டுள்ள சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஒரு நாள் இங்கு மோதல்கள் நிகழலாம் என்ற எதிர்பார்ப்புக்களும் உண்டு.

சீனா தனது முத்து மாலை திட்டத்தை விஸ்தரித்து வருவதாகவே இந்தியா கருதுகின்றது. கடற்படை தளங்களையும் இலத்திரனியல் கண்காணிப்பு நிலையங்களையும் அது அங்கு நிறுவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தியா தனது ஆளுமைக்குள் உள்ள பகுதி என நம்பிய பகுதிகளில் சீனா தனது பலத்தை அதிகரித்து வருகின்றது.

சீனாவானது தனது கடல் பாதைகளை கிழக்கு பக்கமாக விரிவாக்கி வருவதுடன் மலாக்கா பகுதியிலும் அது தனது பாதுகாப்புக்களை அதிகரித்து வருகின்றது. மலேசியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான முக்கிய புள்ளியாக அது உள்ளதுடன் அது இந்து சமுத்திரம் மற்றும் தென்சீனக் கடல் பேன்றவற்றுடன் தொடர்பை கொண்டுள்ளது.

தனது எண்ணெய் கப்பல்களின் பயணத்தின் போது ஒடுக்கமான பாதைகளில் எந்த அச்சுறுத்தல்களும் இருப்பதை சீனா விரும்பவில்லை. தென்னிலங்கையின் அம்பாந்தோட்டை மீன்பிடிக் கிராமத்தை சீனா ஒரு பில்லியன் டொலர் செலவில் துறைமுகமாக அபிவிருத்தி செய்து வருவது இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை சீனா எவ்வாறு கருதுகின்றது என்பதற்கான உதாரணமாகும்.

அம்பாந்தோட்டைப் பகுதியில் அமைந்துள்ள ஆழ்கடல் துறைமுகம் அபிவிருத்தி வலயத்தையும் எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையத்தையும் கொண்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக பாகிஸ்தானின் அரபிக் கடல் பகுதியில் உள்ள கௌடார் பகுதியிலும் சீனா துறைமுகம் ஒன்றை அமைத்து வருகின்றது.

வளைகுடா நாடுகளில் இருந்து வரும் மசகு எண்ணைகளையும் எரிவாயுக்களையும் மேற்கு சீனா பகுதிக்கு கொண்டு செல்லும் மையமாக அது பயன்படுத்தப்படவுள்ளது. பங்களாதேசத்தில் உள்ள சிற்ற கொங் பகுதியிலும் எண்ணை சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு சீனா திட்டமிட்டுள்ளது. வங்களாவிரிகுடாவின் வடபகுதியில் இந்தியாவுக்கு கிழக்காக அது உள்ளது.

இந்த தளங்கள் சீனாவின் வளர்ந்து வரும் நீர்மூழ்கிக்கப்பல்களின் தளமாக பயன்படுத்தப்படலாம். அவ்வாறு பயன்படுத்தப்பட்டால் அது பேர்சியன் வளைகுடாவில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் கப்பல்களுக்கு அச்சுறுத்தலாக அமையலாம்.

சீனா மியான்மாரில் ஒரு கடற்படைச் தளத்தையும் அதற்கு அண்மையாக வங்களா விரிகுடா பகுதியில் உள்ள தீவுகளில் கண்காணிப்பு நிலையத்தையும் அமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மற்றுமொரு தளத்தை மலைதீவின் மராவோ தீவுகளில் அது அமைத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இது பிரித்தானியா படைகளின் தளமான டியகோ கரிசியா பகுதிக்கு தெற்காக உள்ளது. தற்போது பிரித்தானியாவின் தளத்தை அமெரிக்கா பயன்படுத்தி வருகின்றது.


வெளிநாடுகளில் தளங்களை அமைப்பதில் தமக்கு ஆர்வமில்லை என சீனா தெரிவித்து வருகின்றது. ஆனால் அதன் பொருளாதாரம் வளர்ச்சி கண்டு வருகின் றது. அதன் கடற்படை பாரிய வளர்ச்சியை கண்டுள்ளது. இந்த நிலையில் அதன் ஆளுமையை வலுப்படுத்த தளங்கள் தேவை.

பங்களாதேஷ், இலங்கை, கம்போடியா, மியான்மார், பாகிஸ்தான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இவ்வாறான வசதிகளை ஏற்படுத்துவதற்கு சீனா விரும்புகின்றது. ஏடன் வளைகுடாவில் ஒரு கடற்படைத் தளத்தை அமைக்க வேண்டும் என சீனா கடற்படையின் ஆயுத ஆய்வு நிலையத்தை சேர்ந்த அதிகாரி றியர் அட்மிரல் ஜின் சோவூ கடந்த டிசம்பர் மாதம் தெரிவித்திருந்தார். அது சீனாவின் வலுவை மேலும் மேற்கு நோக்கி நகர்த்தலாம்.


இந்தத் திட்டம் சோமாலியா கடற்கொள்ளையர்களுக்கு எதிரான அனைத்துலாக நடவடிக்கை படையுடன் சீனாவை இணைத்துக் கொள்ளலாம். கடற்கொள்ளை என்பது வளர்ந்து வரும் பிரச்சினை என்பது உண்மையானது. அது ஏடன் வளைகுடாவில் மட்டுமல்லாது அரபுக் கடலிலும் மலாக்காவிலும் பரவலாம்.

2009 ஆம் ஆண்டு எண்ணைதாங்கி கப்பல்கள் மீது 42 தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக அனைத்துலக கடல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு கடல்கொள்ளை தொடர்பான நடவடிக்கைகளை கண்காணித்து வருகின்றது. 2008ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 40 விகிதம் அதிகம். பெருமளவானவை சோமா லியாவிலும் அரபுக்கடல் பகுதியிலும் நடை பெற்றன.



ஆனால் சீனாவின் கடற்படையின் விரிவாக்கம் ஏடன் வளைகுடாவில் கால்பதிக்கும் நிலையை ஏற்படுத்தும் என்பது தெளிவானது.அது வேறு ஒரு பரிணாமத்தை ஏற் படுத்துவதுடன் ஏற்கனவே ஆபத்தான பகுதியாக உள்ள இந்த கடல் பிரதேசத்தில் மோதலுக்கான அச்சுறுத்தல்களை அது ஏற்படுத்தும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







நீரிழிவை வெற்றி கொள்வோம் நூல் வெளியீடு யாழ். மருத் துவபீட மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் மங்கல விளக்கேற்றுவதையும் பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சிவசுதன் நூலை வெளியிட்டு வைக்க முதல் பிரதியை வைத்திய கலாநிதி திருமதி கணேசமூர்த்தி பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## இறுதிவரை பரபரப்பை ஏற்படுத்திய இருபது-20 போட்டியில்

# யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் அணி எஸ்.எஸ்.சி.கிண்ணத்தை சுவீகரித்தது

(யாழ்ப்பாணம்)

இறுதிவரை பரபரப்பாக நடைபெற்ற இருபது-20 போட்டியில் பிரியதர்ஷன்-ஜனார்த்தனன் ஜோடியின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் யாழ்.ஜொலிஸ்ரார்ஸ் அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில்வெற்றிபெற்றுஎஸ்.எஸ்.சி. வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் எஸ்.எஸ்.சி. வெற்றிக் கிண்ணத்திற்கான இருபது-20 கிரிக்கெட் தொடர் நடத்தப்பட்டது.

இதில் யாழ். ஜொலிஸ்ரர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழக அணியும் இறுதி போட்டிக்கு முன்னேறின.

இந் நிலையில் தொடரின் இறுதிப் போட்டி நேற்று யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொலிஸ்ரார்ஸ் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் ஜெயராஜா 27 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 36 ஓட்டங்களையும் உமாதரன் 17 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 22 ஓட்டங்களையும் பகீதரன் 15 ஓட்டங்களையும் எடுத்து அத்துடன் உதிரிகளாக 36 ஓட்டங்களை கே.சி.சி.சி. அணி வழங்கியது.

பந்து வீச்சில் கே.சி.சி.சி. அணி சார்பாக கார்த்திக் 4 ஓவர்கள் பந்துவீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ராகுலன், றொபேசன் ஆகியோர்தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.







பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 19.5 ஓவர்களில் 164 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் உமாநாத் 33 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் வல்லவக்குமரன், றொபேசன் ஆகியோர் தலா 20 ஓட்டங்களையும் ராகுலன் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

அத்துடன் உதிரிகளாக 32 ஓட்டங்களை ஜொலிஸ்ரார்ஸ் அணி வழங்கியது. பந்துவீச்சில் ஜொலிஸ்ரார்ஸ் அணி சார்பாக பிரியதர்சன் 4 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் ஜனார்த்தனன் 4 ஓவர்கள் பந்துவீசி 33 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் நாதன் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் யாழ். ஸ்ரான்லி விளையாட்டுக்கழகத்தில் எஸ்.எஸ்.சி. வெற்றி கிண்ணத்தை யாழ். ஜொலிஸ்ரார்ஸ் அணி கைப்பற்றியது.

# இறுதிப் பந்துவரை போராடி இந்திய அணி 'திரில்' வெற்றி

(ஜெய்ப்பூர்)

முதலாவது ஒருநாள் போட்டியில் இறுதிப் பந்துவரை போராடி இந்திய அணி ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தியது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டிகளில் வெற்றிபெற்ற நிலையில் முதலாவது ஒருநாள் போட்டி நேற்று ஜெய்ப்பூரில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் ஜக் கலிஸ் முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தார்.



இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓட்டங்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 298 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சுரேஷ் ரெய்னா 63 பந்துகளில் (6 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 58 ஓட்டங்களையும் வீரேந்திர சேவாக் 37 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 46 ஓட்டங்களையும் தினேஷ் கார்த்திக் 56 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 44 ஓட்டங்களையும் ஹேறாலி 31, தோனி 26, ஜடேஜா 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் ஜக்கலிஸ் 3 விக்கெட்டுக்களையும் பார்னல், லாவ்வோல்ட், மோர்கல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 287 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இறுதிப் பந்தில் 3 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் முதலாவது ஓட்டத்தை எடுத்து இரண்டாவது ஓட்டத்திற்கு முயற்சித்தபோது ரன் - அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இதில் அணித்தலைவர் ஜக் கலிஸ் 97 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 89 ஓட்டங்களையும் பார்னல் 47 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 49 ஓட்டங்களையும் ஸ்ரையன் 19 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 35 ஓட்டங்களையும் போஸ்மான் 29, கிப்ஸ் 27, டி வில்லியர்ஸ் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரவீந்திர ஜடேஜா 10 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 29 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் சிறிகாந்த், பிரவீன் குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் நெகரா, யூசுப்பதான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு சகல துறையிலும் ஜொலித்த ரவீந்திர ஜடேஜா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# தைட், நான்ஸ் அசத்தல்; அவுஸ்திரேலியா வெற்றி



(ஹோபாட்)

தைட்-நான்ஸ் ஜோடியின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் அவுஸ்திரேலிய அணி முதலாவது இருபது-20 போட்டியில் 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்தியது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 2 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகின்றது.

இதில் ஒரு நாள் தொடரை அவுஸ்திரேலிய அணி 4:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் முதலாவது இருபது-20 போட்டி நேற்று ஹோபாட்டில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி வோர்னர்-ஹடினின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 179 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வோர்னர் 32 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 49 ஓட்டங்களையும் பிறேம் ஹடின் ஆட்டமிழக்காமல் 16 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 37 ஓட்டங்களையும் வோட்ஷன் 19 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 37 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் மில்லர், சிமித் மற்றும் ஹயில் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சமி, பொல்லார்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 141 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ராம்டீன் 26 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 44 ஓட்டங்களையும் மோர்ரன் 41 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தைட் 4 ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் நான்ஸ் 4 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுக்களையும் ஜோன்ஸன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு திருப்பு முனையமைத்த தைம் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவதும் இறுதியுமான போட்டி நாளை நடைபெறுகிறது.

# தமிழ்க் கூட்டமைப்பு உடைந்தது?...

போன்றவர்களுக்கு மீண்டும் போட்டியிடும் வாய்ப்பளிக்கக் கூட்ட மைப்பு விரும்பவில்லை.

வேட்பாளர் ஒதுக்கீடு பற்றிய கலந்துரையாடலின்போது யாழ்.மாவட்டத்தின் தமது கட்சிக்கு ஒதுக்கப்பட்ட இரு இடங்களையும் திருமதி பத்மினி சிதம்பரநாதனுக்கும், கஜேந்திரனுக்கும் வழங்குமாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்த வேண்டுகோளும் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**இந்தியாவுக்கு விரும்பமில்லை**

பத்மினி சிதம்பரநாதனுக்கும் கஜேந்திரனுக்கும் தங்கள் கருத்துக்களைக் கூறுவதற்கே சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. அவர்களுடன் உறவுகள் வைத்திருப்பதை இந்தியா விரும்பாததே இதற்குக் காரணமாகும் என அவதானிகள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

இரா.சம்பந்தன் தலைமையுடன் ஏற்பட்ட இம் முரண்பாடுகள் காரணமாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டத்தை விட்டு வெளியேறியுள்ளார். ஆனால் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்குள் உள்ள ஏனையவர்கள் கூட்டமைப்பின் சார்பாகத் தேர்தலில் நிற்பதையே விரும்புவதுபோல தெரிகின்றது.

கட்சியின் தலைவர் ஆ.விநாயகமூர்த்தி கூட்டமைப்பின் சார்பாக வேட்பாளராக நிற்பதில் உறுதியாகவுள்ளார். இந்த விடயத்தில் கஜேந்திரகுமார் கட்டுப்பாட்டிலிருந்து கட்சி உண்மையில் விலகி விட்டது என்றே கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் யார் என்ன நிலைப்பாட்டை எடுத்தாலும் கொள்கையிலிருந்து விலகமாட்டேன் என்பதில் கஜேந்திரகுமார் உறுதியாகவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கொழும்புத் தமிழ் உயர்குழாம் கஜேந்திரகுமாரை சமாதானப்படுத்த எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றி பெறவில்லை. கூட்டமைப்பின் இந் நிலைப்பாட்டின் காரணமாக இந்தத் தடவை தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கும் மன நிலையில் கஜேந்திரகுமார் இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

**மாற்று அணி உருவாகும்**

இருப்பினும் மாற்று அணி ஒன்றை உருவாக்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்கள் பலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறான வழியில் செல்வதால் மாற்று அணி ஒன்றினை உருவாக்குமாறு கஜேந்திரகுமாரிடமும், திருமதி பத்மினி சிதம்பரநாதனிடமும் வற்புறுத்தியுள்ளனர்.

அது தொடர்பாக சில கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன. பருத்தித்துறையில் ஒரு கூட்டம் நடைபெற்றுள்ளது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரன் ஆகியோர் இணைந்து தனியணியாகப் போட்டியிட வேண்டும் என்றே இவர்கள் விரும்புகின்றனர்.

வேறு சிலர் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம் மற்றும் சிறிகாந்தா ஆகியோருடன் இணைந்து மாற்று அணியினை உருவாக்க வேண்டும் எனவும் கருதுகின்றனர்.

எனினும் சிறிகாந்தாவை இணைத்துக் கொள்வதில் இவர்கள் மத்தியில் தயக்கம் இருப்பதாகவே நம்பப்படுகின்றது.

**சங்கரியும், சித்தார்த்தனும்**

ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் என்போரையும் இணைத்து பரந்த கூட்டணியை உருவாக்க வேண்டும் என்பது போன்ற கருத்துக்களும் சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவர்களது கடந்த கால அரசியல் வரலாறு கசப்பானதாக இருந்தாலும் அதிலிருந்து அவர்கள் மீண்டும் வருவார்களாயின் இணைத்துக் கொள்வதில் தவறில்லை எனவும் இவர்கள் கருதுகின்றனர்.

எனினும் கடந்த காலத்தில் தாம் எடுத்த நிலைப்பாடுகள் தொடர்பான சுயவிமர்சனங்களை மேற்கொள்வதுடன் இருதேசக் கோட்பாடு, திம்புக்கோட்பாடு என்கிற தமிழ் மக்களின் அடிப்படைக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டால் மட்டுமே இவ்விடயத்தை ஆராய முடியும் என இளைஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் ஆனந்தசங்கரியின் இந்திய சார்பு நிலைப்பாட்டையும் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். தற்போதைய கால கட்டம் ஒரு புது அரசியலை நகர்த்த வேண்டிய கால கட்டம்.

பழைய சம்பவங்களையே தூக்கிப்பிடித்தால் அதனை நகர்த்த முடியாது போன்ற கருத்துக்களையும் சிலர் முன்வைத்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இவற்றினை விட யாழ்.மாவட்டத்தில் சிறுபான்மைத் தமிழர் மகா சபை , மீனவர் சங்கம், புதிய ஜனநாயகக் கட்சி, புதிய இடதுசாரி முன்னணி என்பனவும் போட்டியிடவுள்ளன.

அவர்களையும் மாற்று அணியில் இணைத்துக் கொள்வது நல்லது என்ற அபிப்பிராயமும் நிலவுகின்றது. திருகோணமலை இளைஞர்கள் சிலர் மாற்று அணி வட கிழக்கு முழுவதும் போட்டியிடுதல் வேண்டும் என அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

இரு அணிப் போட்டி திருகோணமலையில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்து விடும் என்ற கருத்துக்களும் விவாதிக்கப்பட்டு வருகின்றன.

மாற்று அணியின் வேட்பாளர்களை இரு தேசக் கோட்பாடு, திம்புக் கோட்பாடு தொடர்பாக தேர்தலின் முன்னர் சத்தியப்பிரமாணம் எடுக்க வைக்க வேண்டும் போன்ற கருத்துக்களும் இளைஞர்கள் மத்தியில் எழுந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


# மக்கள் வங்கி

**மத்திய மயப்படுத்தப்பட்ட தரம் உயர்த்திய கணனி வங்கிச்சேவை தொடக்க விழா**

காலம்: 22.02.2010, மு.ப. 9.00
இடம்: யாழ்/ பல்கலைக்கழகக்கிளை

பிரதம விருந்தினர்
திரு. என்.சண்முகலிங்கன் (உபவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

காலம்: 22.02.2010, மு.ப. 11.00
இடம்: ஸ்ரான்லி வீதிக் கிளை

பிரதம விருந்தினர்
திரு. ஈ.எஸ்.பி.நாகரத்தினம் (உரிமையாளர், கஜமுகன் ஹாட்வெயார்)

இந் நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் விருந்தினர்கள்:

மக்கள் வங்கி பொது முகாமையாளர்
திரு. P.V. பத்திரன
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்
திரு. N. வசந்தகுமார்
உதவிப் பொது முகாமையாளர் (வடவலயம்)
திரு. T.K. ஆனந்தராஜா
பிராந்திய முகாமையாளர் (யாழ். பிராந்தியம்)
திரு. S.பத்மநாதன்

இன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உதவிப் பொது முகாமையாளர்
(வடவலயம்)
பிராந்திய முகாமையாளர்
(யாழ். பிராந்தியம்)

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

(அ-4484)


## இந்திய...

ஆறு வாரங்களுக்கு முன்னதாகவே அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்திய அமைச்சு தற்போது சட்டம் போட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், சீனா, ஈரான், ஈராக், பாகிஸ்தான், இலங்கை ,சூடான், பிற நாடுகளில் வசிக்கும் பாகிஸ்தானிகர்கள் மற்றும் நாடற்றவர்கள் இந்த வகுப்புக்குள் அடங்குவர் என்று அந்த அறிக்கை கூறுகின்றது. (ச-5)

## ரணில்...

டங்களில் தலா ஒரு வேட்பாளரும் நிறுத்தப்படவுள்ளனர்.

தேர்தலின் பின்னர் இரு கட்சிகளுக்குமிடையில் இடம்பெறும் உடன்பாடுகள் குறித்து இவ் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ரி.எம்.வி.பி...

குறிப்பிட்டுள்ளார்.

இவர்களின் வேட்புமனுத் தாக்கல்கள் நாளை 23 ஆம் திகதி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி கிழக்குப் பிராந்தியத்திற்கு மாத்திரம் உரித்தான கட்சி அல்ல. அது சகல பிராந்திய மக்களுக்கும் உரித்தான கட்சி என்ற அடிப்படையிலேயே இந்த முடிபு எடுக்கப்பட்டுள்ளதாக ஆசாத் மௌலானா கூறியுள்ளார். (ச-5)

## ஐ.ம.சு.கூட்டமைப்பு கம்பஹாவில் மனுத்தாக்கல்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக கம்பஹா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் வேட்புமனுக்களை தாக்கல் செய்யவுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் குழுவின் தலைவராக ஜனாதிபதியின் ஆலோசகரும், சகோதரருமான பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். (ச-9)

## மனோ...

ஜனநாயக மக்கள் முன்னணி தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு, கம்பஹா ,கண்டி, கேகாலை , இரத்தினபுரி மற்றும் நுவரெலியா , வன்னி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் ஜனநாயக மக்கள் முன்னணி யானைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட மனோ கணேசன் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். (ச-5)

## சரத்...

சிரேஷ்ட படையதிகாரியான லெப்ரினன்ட் ஜெயசூரிய மற்றும் கூட்டுப் படைத் தலைமை அதிகாரி ஜெனரல் தயாரட் நாயக்க ஆகியோர் சரத் பொன்சேகாவின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் சரத் பொன்சேகாவின் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர், இராணுவத்தின் நீதிபதி சட்டத்தரணி ஜெனரல் இந்திர விஜயரட்ண வழக்கு விசாரணை தொடர்பான திகதி உட்பட்ட தீர்மானத்தை மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## தமிழ்த் தேசியக் கூட்ட...

டதன் அடிப்படை , அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு கூட்டமைப்பு செயற்பட்ட அடிப்படையிலிருந்து விலகி சென்றதன் காரணமாகவே காங்கிரஸ் கட்சியாகிய நாம் கடந்த வெள்ளிக்கிழமை இந்த முடிபினை எடுத்தோம்.

இந்த நிலையில் நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் நாம் போட்டியிடுவது தொடர்பாக விரைவாக அறிவிக்கவுள்ளோம் என்றும் கூறினார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் இந்த முடிபு குறித்து த.தே.கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில், தமிழ்க் காங்கிரஸ் கட்சி இவ்வாறான ஒரு முடிபினை எடுக்கவில்லை.

ஆனால் அதன் செயலாளர் அவ்வாறான தகவலை வெளியிட்டிருந்தாலும் மீண்டும் அக் கட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைத்து செயற்பட நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகவும் கூறினார். (ச-9)


# பதினொராவது ஆண்டு நினைவு



தோற்றம்
01-01-1922

மறைவு
23-02-1999

ஸ்ரீமான்
**சின்னையா நல்லையா**

(வட்டாரம் 6, மண்டைதீவு)
திதி:22.02.2010

தெய்வமாகி எங்கள் இதயத்தில்
திருவுருவாய் உறைந்து நிற்கும் ஐயா!
நெஞ்சுருகி நினைப்போம்
நிமலன்தாள் இருக்கவென்று

-குடும்பத்தினர்.

21/3A, இந்துமகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.


## நடைபெறவுள்ள பொதுத்...

தேர்தல்களில் போட்டியிட்டவர்கள் தான் மீண்டும் போட்டியிட வேண்டும் என்ற நிலைமை எங்கும் இருந்தது கிடையாது. வேட்பாளர்கள் தெரிவு அந்தக் கட்சிகளின் பொறுப்பாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் இன்றைய நிலைப்பாட்டின்படி சில உறுப்பினர்களைத் தவிர ஏனையவர்கள் போட்டியிடுகின்றனர். கூட்டமைப்பிலிருந்து சுய விருப்பின் பேரில் விலகிச் சென்றவர்கள், வெளிநாடுகளில் வசிப்பவர்கள், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு கட்சியை விட்டு வெளியேறியவர்கள் மற்றும் இவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களைத் தவிர ஏனையவர்கள் போட்டியிடுகின்றனர்.

சில உறுப்பினர்களுக்கு நாம் இடம் கொடுக்கவில்லை. ஏனெனில் இவர்களை விட திறமையான உறுப்பினர்கள் போட்டியிட முன்வந்துள்ளார்கள். எமது கட்சியில் 5 பேர் கொண்ட வேட்புமனு குழுவுள்ளது.

இக் குழுவுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலரும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். இதன் அடிப்படையில் நாம் பொதுமக்களின் தரப்பினருடன் பேசியும், எமக்குத் தாக்கல் செய்த வேட்புமனுக்களின் அடிப்படையிலும், கட்சி உறுப்பினர்களின் செயற்பாடுகளின் அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு போட்டியிடுபவர்கள் தொடர்பான முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிட விரும்பின் எம்மால் நிராகரிக்கப்பட்டவர்கள் இரண்டு அல்லது மூன்று வேட்பாளர்கள்தான் என்றார்.

இப்பொதுத் தேர்தலில் 18 தொடக்கம் 20 வரையான ஆசனங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கும் என்று எமக்கு நம்பிக்கை உண்டு என்றார். (ச-5,9)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.